# "புதிய கருத்துக்கள்"

## நூல் - 4

## கலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்கள்





எழுதியவர்
இராம. ஜெயபாலன்



இது ஓர் அடிப்படைத்
தத்துவ விழுமியங்களை
ஆய்வுசெய்யும் ஆய்வுநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதிய கருத்துக்கள்"

## நூல் - 4

### குலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்கள்

அன்பளிப்பு
இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்



எழுதியவர்
இராம. ஜெயபாலன்



இது ஓர் அடிப்படைத்
தத்துவ விழுமியங்களை
ஆய்வுசெய்யும் ஆய்வு நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

முதற்பதிப்பு டிசம்பர் 1996

ஊக்குவிப்பு - ரூபா 50-00

இராம. ஜெயபாலன்

கொக்குவில்

அச்சிட்டோர்:

கபிலா பதிப்பகம்,

369, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கவியரச
விஸ்வப்பிரம்மம்
...வ இ. எஸ். காந்தன் (குரு...
(...தாசன் - ஏகுரான்)

# ஆசிரியர் உரை

என்னால் பகுதி பகுதியாக முன்வைக்கப்படும் புதிய கருத்துகள் நூல் வரிசையில் நாலாவது இடத்தை கலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்கள் என்னும் தலையங்கம் தாங்கும் நூல் அலங்கரிக்கிறது.

நூல் 3 இல் வெளியான மனிதநாகரீகதத்துவக் கருத்துக்கள் நூலுக்கு இன்நூலூடாக, கனதியான ஆதாரங்களை தருவது மட்டுமன்றி ஒரு முழுமையான பொதுமனித இலக்கியத்திற்கு வழிசமைக்கும் பொதுக்கலாச்சார நாகரீகப் பாதைகளையே இன்நூல் சுட்டிக்காட்ட முனைகின்றது.

## இன்நூல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் கலாச்சாரங்கள்

1) ஒழுக்க நெறிப் பண்பாட்டுக் கலாச்சாரம்

(2) மருத்துவக் கலாச்சாரம்

(3) நீதிபரிபாலன ( அறநெறிக் கலாச்சாரம் )

(4) கல்விக் கலாச்சாரம்

(5) உடை அணிகல கலாச்சாரம்

(6) மொழிக் கலாச்சாரம்

(7) கட்டிடக்கலை கலாச்சாரம்

(8) யுத்தக் கலாச்சாரம்

(9) இசை நாட்டிய பாரம்பரியக் கலாச்சாரம்

(10) அரசியல் கலாச்சாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல கலாச்சாரப் பாரம் பரியங்களைக் கொண்டே பெருபாலான எல்லா மனித இனக் கலாச்சாரக் குழுமங்களும் தத்தமக்கென தனித் துவங்களைக் கொண்டு விளங்குகின்றன. இருப் பின் பொதுவாக முதல் நாகரீக மடைந்து சோசலீசக் கொள்கை யுடைய ஆரியர் என்று தம்மை அழைத்த ஒரு குழுவே மேற்படி கலாச்சாரங்களை கொண்ட மனித இனங்கள் நாகரீகமடைய காரண மாக அமைந்ததென இந்நூல் கருதுகின்றது.

இதைவிட இவ்வாறு சோசலீச கொள்கையுடனும் அறிவியல்பாரம் பரியத்துடனும் பண்பாட்டுக்கொள் கைகளுடனும் ஒருவனே இறைவன் என்னும் பிரபஞ்சத் தத்துவங்க ளுடனும் மொழியுடனும் யுத்தபண் பாடுகளுடனும் உலகம் முழுவதை யும் ஒரே குடையின் கீழ் கொண் டுவருவதனூடாக மனித இன சுய நல யுத்தங்களுக்கும் பிரிவினைக ளுக்கும், சாத்தான் வழிபாடுகளுக் கும், முற்றுப்புள்ளிவைக்க முடியு மென நம்பியதுடன் சமத்துவத்தை யும் சகோதரத்துவத்தையும், சமா தானத்தையும், அமரத்துவ ஆன்மாக் களை ஒருவனே இறைவனென்னும் கொள்கையின்கீழ் நினைவு கூருத லையும் அடிப்படையாகக் கொண்டு செயல்பட எண்ணிய ஆரியக்கொள்கை நாளடைவில் உலக மனிதஇனத்தை இரண்டாகப் பிரித்தது ஒன்று ஆளும் வர்க்கம், மற்றையது ஆளப்படும் வர்க்கம். மேற் படி தன்மைகளை மனித நாகரீக தத்துவக்கருத்துக்கள் நூலில் பிர திபலிக்கக் கண்டாலும் இந் நூலினூடாகமேலும் பல விளக்கத் தெளிவுகளுக்கு வரமுடியுமெனநம் புகின்றேன்

—ஆசிரியர்—

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஒழுக்க நெறிக் கலாச்சாரமும் கூட்டுறவும் குடும்ப வாழ்க்கையும்

ஆரம்ப காலத்தில் அறியாமை யும், பெண்ணாதிக்கமும் விபச்சார மும் நீதியற்ற கெரில்லாப்பாணியி லான யுத்தங்களாலும், மாமிச உணவுண்ணும் கொடும் தன்மையா லும் புலால் உண்ணும் வெறியாட் டங்களாலும், மனித சுயநல வாழ்க் கையாலும் மனித அழிவையும் தடுப்பதற்கு, அறிஞர் சிலர் மேற் கொண்ட சோசலீச நாகரீகம் அதா வது சமதர்மம், சமாதானம், சகோதரத்துவம், அகிம்சை மற்றும் இறைவன் ஒருவனே என்ற பிரபஞ்சக் கொள்கையுடனும் எழுத்து மொழியுடன் ஒருவனுக்கு ஒருத்தியென்னும் பண்பாட்டுட னும் மனிதரிடையே நிர்வாக அமைப்புக்களையும் ஆட்சி முறை களையும் உலகம் முழுவதிலும் ஏற் படுத்தி ஒரு பொதுமத்திய ஆட்சியை நிலைநிறுத்தி மனிதரின் போட்டி பொறாமை களை நீக்கி ஒரு சமாதான சமு கத்தை ஏற்படுத்த எண்ணிச் செயல்பட்ட ஆரியர்கள் (நல்ல வர்கள்) என்ற குழுவினர், தமது முதற்கட்டமாக பெரும்பாலான உலகத்தின் பகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந் தாலும், பாமரமக்கள் மத்தியில் இச்சோசலீசக் கொள்கை மூன்று பெரும் பிரிவுகளாக

1 இந்துசமயம் 2 கிறிஸ்தவசமயம் 3 இஸ்லாம்சமயம் எனப் பிரிந்தன.

## ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒழுக்கம் கண்ட மாற்றங்கள்

முன்னர், மேலே நாம்பார்த்த சோசலீசக் கொள்கை குழு உலக முழுவதையும் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்தாலும், காலப் போக்கில்ஆளும்வர்க்கம் ஆளப்படும் வர்க்கமென ஔவைப்பாட்டி சொ ன்ன சாதி இரண்டொழிய சாற் றும்கால் நீதி நளுவா நெறிமுறை யில் இட்டோர் பெரியோர் இடா தோர் சிறியோர்பட்டாங்கில்உள்ள படியென கூறியது போல சமதர்மம் சுயதர்மமாகவும் இட்டோர் பெரி யோர் இரங்குபவர் எதிர்கால மனித தேவைச் சமதர்ம நோக்கங்க ளுக்காக தான தர்மம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக் குறிக்கும் பண்பாட்டிலான இரு பெரும் பிரிவுகளானதென்பதை மனித நாகரீக வியல்தத்துவக் கருத்துக்கள் நூலினூடாகவும் கண்டோம். அதாவது இச் சமதர்ம சோசலீசக் கொள்கை, சுயதர்ம சோசலீசத்தின் விளைவால் முதலாளித்துவ சோசலீசமாகவும், அடிமைச் சோசலீசமாகவும், பிரிவுண்ட வேளையிலேயே கூட்டுறவுக் குடும்ப வாழ்க்கை மலர்ந்தது.

எனவே ஒரு தாய் தந்தையின் கீழ் உதயமாகிய கூட்டுறவுக் குடும்ப வாழ்க்கை நிலவுடமை, பொருள் பண்டம், மற்றும் மனிதவாழ்க்கை தேவைகள் தனித்தனியே முடக்க முற்று பாவனைக்கு உதவாமல் போவதைத் தடுக்க கூட்டுறவுக் குடும்பத்தின் நிர்வாகிகளான முதல் தாய் தந்தையின் கைகளிலேயே பங்கீடு விடப்பட்டிருந்தாலும் இவர்களால் விதிக்கப்பட்ட சட்டங்களூடே நிர்வாகம் மாற்றமடைந்தாலும் உயர்நிலை பெரியோர் சங்கம் அல்லது சபை என தமிழ்ச் சங்கம் கூறும் முறை ஏற்படுத்தப்பட்டு முதலாளித்துவ சோசலீசம், மற்றும் அடிமைச் சோசலீசம் சம்பந்தமான விவாதங்களும் நீதி விவாதங்களும் செய்யும் சோசலீச முறையிலான சபை ஏற்படுத்தப்பட்டு குடும்ப வழி அரசாட்சி ஏற்படுத்தப்பட்டது. எனவே உயர் குடும்பத்தினர் மட்டுமே திருமணம் செய்யும் குடும்ப வாழ்க்கை மேலைத் தேசத்திலும், கீழைத் தேசத்திலும் நிலவியதெனலாம், எனவே மேற்கத்தையம் என்றால் என்ன, கிளக்கத்தையமென்றால் என்ன கீழ்பட்ட மக்கள் ஒருவனுக்கு ஒருத்தியென்னும் சோசலிச கொள்கையின் பால் கவரப்படாமல் தம் இஸ்ரப்பட்டவர்களுடன் கூடி வாழ்ந்தும் பிரிந்தும், மிருக வாழ்க்கையும் திட்டமிடப்படாத வாழ்கையுமாக அடிமைகளாகவே ஜீவித்தனர்,

இவர்கள் தங்கள் யுத்த திறமைகளால் ஆண்களாயின் பல பெண்களையும் பெண்களாயின் பல ஆண்களையும் கொண்டு வாழ்ந்தது மட்டுமல்லாமல், சாத்தானின் லீலைகளில் கைதேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள்.

## அடிமைகொள் திருமணங்கள்

மேற்படி கூட்டுறவுக் குடும்ப அமைப்பினர் தமது கொள்கைகளை ஏற்று நடப்பவர்களை, வீரர்களுக்கு போதமில்லை அறிஞர்களுக்கு பேதமில்லை, அழகுள்ளவர்களுக்கு பேதமில்லை. என இவர்களையும் உள்வாங்கினாலும் அறியாமையுள்ளவர்களையும் இனவிருத்தியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியின் நிமித்தம் அடிமை கொண்டு திருமணம் செய்து அடிமை கொள்ளப்பட்டவரின் பெற்றோருக்கு நன்கொடை கொடுத்து அவர்களை அறுதியாகப் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் பிள்ளைப் பெறும் இயந்திரமாகவும், வம்சத்தை விருத்தி செய்ய வந்த அடிமையாகவும், மாமியார்கொடுமைக்கும், மற்றவர்களின் ராக்கிங்கும் உட்படுத்தப்பட்டமையே இன்னும் இந்தியாவில் காணப்படும் பெண்ணடக்கு முறைக்கு வித்திட்டது. இருப்பினும் ஆண்களும் நன்கொடைகள்மூலம் அடிமைகொள்ளப்பட்டவர்கள் என்பதற்கு ஆதாரமாக யாழ்ப்பாண நடைமுறை விழுமியங்கள் சான்று பகர்கின்றன,

## ஒருவர் பலரைத் திருமணம் செய்யும் முறை

ஆரம்பகாலச் சோசலிசம் முதலாளித்துவ வாதிகளின் கைகளில் அகப்பட்டு ஆங்காங்கே அலங்கோலப்பட்டும், சிற்சில இடங்களில் நீதி வழுவாத செங்கோல் ஆட்சியில் தன் மகனையே தேர்ச்சில்லால் நெரித்துக் கொல்ல தீர்ப்பு வழங்கிய உன்னத கொள்கையையும் ஆங்காங்கே நாம் கண்டதுபோல் பிற்பட்ட இனத்தை கூர்ப்பியல்பு நிறமுகூர்த்த மாறுதல்களுக்கு உட்படுத்தும் விஞ்ஞானக் காரணங்களுக்கூடே பலரை ஆட்சியாளர்கள் மணம் முடிக்கலாம் என்னும் பாரம்பரியம் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு வளக்கத்தில் வந்தாலும் இராமனின் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்க்கை முறையை நிலை நிறுத்த முயலும் ஆட்சிகளையும் காணக்கூடியதாகவுள்ளது இதைவிட ஆண்களே பெரிதும் யுத்தத்தில் பலியாக நேரிடுவதால், இச்சமநிலைப் பாதிப்பை ஈடு செய்ய ஒரு ஆண் பல பெண்களை திருமணம் செய்யும் நடைமுறையை இஸ்லாம் சமயத்தில் காண்கின்றோம். இருப்பினும் பெண்களின் முழு விருப்பு வெறுப்புடனுமே இவ்விடையம் கையாளப்படுகின்றது என்பது மற்றுமோர் விடையம்.

## ஒருவனுக்கு ஒருத்தியென்னும் சட்டமும் பதிவுத் திருமணமும்

முன்னர் பொதுமக்களின் சாட்சியங்கள் முன்னால் உறுதிப்படுத்தப்பட்ட திருமணங்கள் இரண்டாம் மகாயுத்தத்தின் பின் ஏற்பட்ட மக்களாட்சியின் போதும் கிறிஸ்தவ சட்ட நடைமுறை காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுமே ஒருவனுக்கு ஒருத்தியை மட்டுமே பதிவுச்சாட்சியமூடே திரும ணம் செய்யலாம் என்னும் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதனால் இந்துசமய தனித்துவ, சமய சார்பு இராச்சியம் உலகில் இல்லாது போனமையால் இச்சோசலிச சட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி காலப்போக்கில் ஒருவனுக்கு ஒருத்தியென்னும் மனோநிலை ஏற்பட்ட திருமண நடைமுறையாகும்.

இந்துசமய தனித்துவ இராச்சியம் பெருவடிவில் தொடர்ந்து இருந்திருக்குமேயானால் இஸ்லாமிய கொள்கை போல், இந்துசமய மும் அதற்கு நிகரான சட்டங்களை கொண்டிருக்குமென்பதாகும்.

# 2 மருத்துவக் கலாச்சாரம்

மனித இன ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை ஆன்மீகசக்திகள் மனித நடவடிக்கைகளை பாதிக்கின்றன என்று நம்பப்படுகின்றது. எனவே முதல் மருத்துவர்கள் ஆன்மீகக் கலை தெரிந்தவர்களே பரம் பரை சுதேசிய மருத்துவர்களாகத் திகழ்ந்தார்கள்.

ஆன்மீக சக்திகளின் ஆற்றலால் ஏற்படும் தொந்தரவுகளால் நோய்கள் காண்கின்றதெனக் கண்டறியப்பட்டபோதும் இயற்கை உடல்நிலைக் கோளாறுகளாலும் (குளிர், வெப்பம்) நுண்ணுயிர் கள் மூலமாகவும் நோய்கள் ஏற்படுகின்றதென்பது அறியப்பட்டமை யால் ஆன்மீகக் கலையுடன் இணைத்து தாவர மூலிகைகளையும் நரம்பு மண்டல செயல்பாட்டையும் பிறவிடயங்களைக் கட்டுப்படுத்த உலோகத்தூள்களும் பாரம்பரிய சுதேசிய மருத்துவர்களால் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளதென அறியக்கிடக்கின்றது.

இவ்வாறு மருத்துவம் ஆன்மீகத்துள் இணைந்து மருத்துவ மூலி கைகளுடன் நாகரீகம் அடைந்தமைக்கு ஆதாரமாக சமய வழிபாட்டு முறைகள் சான்று பகர்கின்றன.

இந்து சமயத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு குல தெய் வங்கங்களும் தத்தமக்கென ஒவ்வொரு மருத்துவ அம்சங்கள் பொருந் திய மரங்களையும், அபிஷேக ஆராதனைகளில் மருத்துவ மூலிகைகள் மற்றும் மருத்துவப் பொடிகளையும் யாகங்களின்போது மூலிகை இன மற்றும் விறகுகள் கற்பூரம்நெய், என்பன துஸ்ட ஆன்மாக்களைவிரட்டி தூய நல்லொழுக்கமுள்ள ஆன்ம வசீகம் செய்தலையும் சூழல் மாச டைவதை போக்குவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை ஒரு நிலைப்படுத்தும் தியான மூடாக அதிக ஆசை காரணமாக ஏற்படும் துன்ப நோய்களிலிருந்து உளவள ஆன்ம மன ஒருநிலை ஏற்படுவதனூடாக மனநோய் சிகிச்சையையும்

இசைப்பாரம்பரிய நாட்டிய இன்னிசை நாட்டிய வாத்தியங்களூடாக மனக்களிப்பும் துன்பங்களை மறந்து மனம் ஆனந்தமடைதலையும் அளகும் அளகுசாதனங்களும் மனக்குதூகலத்தையும் இன்பப்பெருக்கையும் இரசித்தலையும் நோக்கமாகக் கொண்டு நாகரீகமடைதலே மருத்துவ ரீதியான இந்துசமயமாகும்.

இருப்பினும் பாரம்பரிய பாமரமக்கள் மத்தியில் மந்திரம் மருத்துவம் மற்றும் விஷக்கடி மன நோய் சிகிச்சை என்பன மிகப் பழமையான தென்பது அறியப்பட்ட உண்மைகளாகும்

இதைவிட தூயஉணவு ஆசாரம் மருத்துநீர் ஸ்நானம், நீற்றுப் பார்வை. வெப்பமற்ற (கார உறைப்பு) பத்திய உணவு என்பவையூடாக நுண் உயிர்களை அழிக்கும் மருந்துப் பொடிகள் முறிந்த எலும்பை ஒட்டவைக்கும் மூலிகைகள் இரத்தத்தில் காணப்படும் விசச்செறிவைக் கட்டுப்படுத்தும் மூலிகைகள் என்பன உட்பட சுதேசிய கிழைத்தேய வைத்தியம் திகழ்கின்றதென்பது அறியப்பட்ட உண்மைகளாகும். இப்படியான பாரம்பரிய வைத்தியர்கள் ஆன்ம சக்திகளூடாக, நோயாளியிடம் இருந்து என்னநோய் என்பதை கேட்டுத் தெரியாமல் தானாகவே நோயைச் சொல்லி, அறிகுறிகளைக் கேட்டுத் தெரிந்து நோயை உறுதிப்படுத்திக் கொள்வர். பெரும் பாலும் வைத்தியர் ஆன்மசக்தி வசீகர திறமையுள்ளவர் என்பதையறிய, நோய்க்கு உரியவர்கள் வைத்தியரிடம்என்னநோயென்று கூறாமல், வைத்தியர் சரியாகச் சொல்கின்றாரா என்று உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

இவ்வாறான ஆன்மீகத்துக்கும் மருத்துவ மூலிகைகளுக்கும் சான்று பகர்வன, இந்தியாவில் ஏற்பட்ட யூனியன் காபைற் நச்சுவாயுக் கசிவின் போது ஓமகுண்டல யாகம்செய்த பிராமணக் குடும்பமொன்று உயிர் தப்பித்துப் பிளைத்தது என்பது பத்திரிகை வாயிலாக நாம் கண்ட உண்மையாகும்.

## இஸ்லாமியரின் மருத்துவம்

பெரும்பாலும் இஸ்லாமிய அமைப்பின் குருவானவர்களே இச் சக்திகட்டுப்பாட்டு அங்கீகாரத்தை கொண்டிருப்பார்கள் என்பதாகும் இவ்வாறான தன்மைகளூடாக ஓதுதல் (ஜெபித்தல்) எண்ணெய்மூலம் சாத்தானை விரட்டி நோயைக் கட்டுப்படுத்துதல், சவுக்கடி புனிதப் படுத்துதல், போன்றவையூடாக, சாத்தானை விரட்டி மனிதனைப் புனிதப்படுத்தினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேசத்தில் இஸ்லாமியர்களில் குரு அல்லாதவரும் சுதேசி மருத்துவக் கலைகளை தெரிந்து வைத்திருக்கின்றார்கள் என்பது அறியப்பட்ட உண்மையாகும்.

## கிறீஸ்தவரின் மருத்துவம்

கிறிஸ்தவரின் மருத்துவமும், மேலே சொல்லப்பட்டவைபோல் அமைந்திருந்தாலும் – பாவமன்னிப்பு இங்கே முக்கியமான மாற்றத்தையும் உளவள நிம்மதியையும் கொடுக்கின்றது. மனிதரின் கொடும் எண்ணத்தை தனது துன்பத்திற்கும் பிறரின் துன்பத்திற்கும் காரணமான மனநிலையை சாந்திப்படுத்தும் ஆராதனைகளுடனும் ஜெபங்களுடனும், மனித மனநிலையை மேன்படுத்துதலையும், எண்ணெய் மூலம் சாத்தானை விரட்டும் ஜெபங்களுடனும் தியாகநிலைத்திருப்பலி ஆராதனைகளும், திருமணம் சுயநலம், அற்ற சமய குருவானவர்களின் தலைமையின் கீழ் நடைபெறுதலையும் மனித ஆன்மா அழிவுறாது அதாவது நித்தியஜீவியம் உடையது என்னும் கூற்றுக்களுடனும் செய்யப்படுதலாகும்.

இவ்வாறு கிறீஸ்தவ மருத்துவம் அமைந்திருந்தாலும் அச்சமயம் மற்றைய சமையங்கள்போல் தமக்குள் பல பிரிவுகளைக் கொண்டிருக்கின்றதென்பதாகும். எது எவ்வாறாயினும் கிறீஸ்தவ மருத்துவ முறையே ஆங்கில மருத்துவ முறைக்கு வித்திட்டது. ஆதாரம் செஞ்சிலுவை, மற்றும் மருத்துவர்களின் உடை, நடை பாவனை, இதைவிட பெரும்பாலான மருத்துவச் சொற்கள் (மொழி) இலத்தீன் மொழியிலேயே இருககின்றதென்பதாகும். இந்துக்களின் சுதேசிய மருத்துவம் சமஸ்கிருத மொழியிலும், ஆதிதிராவிட மொழியிலும், கிருந்த மொழியிலும், அவர் அவர்களின் தாய் மொழியிலும் மொழிச் சுவடுகள் உண்டென்பதாகும்.

இந்து மருத்துவம் இஸ்லாமிய மருத்துவம் - கற்பூரம் மற்றும் இயற்கை மூலிகை ஆகியவற்றை பாவிப்பதுபோல கிறீஸ்தவ மருத்துவம் மெழுகுதிரி ஆராதனைபோல் புவியில் காணப்படும் இயற்கை வள இரசயானப் பொருட்களாலும் மூலிகை இரசானயப் பொருட்களாலும் மேற்கொள்வதால் கீழைத்தேச மருத்துவத்திற்கும், மேலைத்தேச மருத்துவத்திற்கு மிடையில் பெருவேறுபாடு காணப்படுகின்றது.

## பொது மருத்துவ நாகரீகம்

இன்று நாம் காணும் நவீனத்துவ மருத்துவம் உலகில் பல தரப்பட்ட மருத்துவ அறிஞர்களின் ஆராச்சியின் பயனாக சமய வேறுபாடுகளுக்கு அப்பால் பலவித அறுவைச் சிகிச்சைகள் – லேசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரியக்க சிகிச்சை எனப்பல தரப்பட்ட அம்சங்களுடன் வளர்ச்சி காண்கின்றதென்பது மறுக்க முடியாத உண்மைகளாகும்;

# 3 நீதிபரிபாலன (அறநெறிக்) கலாச்சாரம்

ஆரம்பகால பிரிவினைகளுக்கும் வல்லவன் சொல்வதே நீதி, என்ற கூற்றுக் கெதிராக சோசலீசக் கொள்கை, பாமரமக்கள் மத்தியில் வம்சா வழி ஆட்சியை நிலைநிறுத்த வேண்டிய தேவை யேற்பட்டது. இதன்போதே ஆரிய என்று தம்மை அழைத்த சோசலீச சங்கம், சபை கூட்டுறவு குடும்பமாகவும், நிறுவன ரீதியான சமயத் திற்கு உட்பட்டவர்கள் ஒரு பகுதியாகவும், நிறுவனரீதியான சமய வாழ்க்கைக்குள் உட்படாதவர் மற்றைய பெரும்பகுதியாகவும், இவ்வாறு நிறுவன ரீதியாக செயல்பட்டவர்கள் காலப்போக்கில் மூன்று பெரும் பகுதியாகப் பிரிந்து, இந்துக்களாகவும் இஸ்லாமியர்களாகவும், கிறீஸ்தவர்களுமாகினர்.

இவ்வாறு மூவகை சமயமாகபிரிவடைந்த சமயங்களில் நிறுவன ரீதியான சமயசார வாழ்க்கைக்குள் தம்மை உட்படுத்தியவர்கள் தம்மை ஆரியர்கள் எனவும் வர்ணசாஸ்திர உயர்நிலை வம்சத் தினர் எனப் பிரகடனப் படுத்திக் கொண்டனர். இவ்வாறே மூன்று சமயத்தினரும் தமது சமயத்தில் இணைபவர்களை நீர்மூலம் ஞானஸ் தானம் கொடுத்து தீட்சை கொடுத்தும் புனிதமாக்கியும் நாற்பது நாள் உபவாசம் இருக்கும் நற்பண்புகளுக்கும் வெள்ளிக்கிழமையை ஒரு புனித தினமாக பிரகடனப்படுத்தியும் தனிப்பட்ட மந்திரசக்தி சாத்தான் வழிபாட்டுக்கு முற்றுப்புள்ளிவைத்ததுடன், தன்னைத்தானே கடவுள் என்று கூறும் கூற்றையும் மனிதன் கடவுள் அல்ல இறைவ னும் சொர்க்கமும் நித்திய ஜீவியமுமே மேலானது அதாவது மலங் களற்ற புனிதமடையும் ஆன்மா இறைவனுடன் பற்றற்று இரண்டறக் கலக்கும் என்னும் உயர் தத்துவங்களுடனும் பௌத்தமதத்தில் நிர் குணம் நிர்மலம் பரிமானம் காணுதலையும் அகிம்சைத்தத்துவங்களை யும் சமதர்மத்தையும் சகோதர தத்துவத்தையும் சமாதானத்தை ஏற் படுத்தும். சட்டங்களையும் அறநீதிகளையும் ஏற்படுத்த முனைந்த மையே சமயங்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச்சங்கமும் நீதிச்சபையும்

தமிழ் சங்கங்கள் மூன்று சங்கங்களாக மூன்று சபைகளாக விளங்கின அரசியல் வீவாத சங்கம் ( சபை )
(2) கல்விச்சங்கம் ( சபை )
(3) நீதிபரிபாலன சங்கம் ( சபை )

மூன்று மேல்சபைகளுக்கும் தலைமை வகிக்கக் கூடியவர் சக்கரவர்த்திகளாகும், இதைவிட மாநில மன்னர்கள் மற்றும் மாவட்ட கிராம ஜமிந்தார்களும் சபைகளைக் கொண்டு விளங்கினர்

இவ்வாறு தமிழ்ச்சங்கங்கள் தென் கிழக்காசியாவை ஆளுகின்ற வேளை சமயங்கள் பிரமணர்களின் கைகளிலும் துறைவிகளின் கைகளிலும் இருந்தன, இவர்களே ஆயகலைகளை போதிப்பவர்களாகவும், ஆய்வு செய்பவர்களாகவும் விருந்தமையால் இவர்களே அறிவியல் சங்கமேல் சபை உறுப்பினர்களாகவும் சிலகாலம் தமிழ் மன்னர்கள் பௌத்தத்தையும் சமண சமயத்தையும் தளுவியிருந்த காலங்களில், துறவிகளே அறிவியல் சங்க உறுப்பினர்களாகவும், இருந்தாலும் பிராமணர் வம்சத்தினரல்லாத கீழ் மக்கள் கூட அறிவியல் முதிர்ச்சியை நிருபிக்கும் பட்சத்தில் அவர்களும் அறிவியல் சங்க உறுப்பினர்களாக திகழ்ந்தார்கள் என அறியக்கிடக்கின்றது.

அரசியல் சங்கத்தில் மன்னரின் மூத்த உறவினர் அமைச்சர்கள் தளபதிகள் யுத்தப் பயிற்சியாளர்களும் அங்கம் வகிப்பதாகவும் அமைந்திருந்தது

நீதிபரிபாலனச் சங்கத்தில் சட்டவல்லுனர்களும், ( அறநூல் வித்தகர்களும் ) அமைச்சர்களும் அங்கம் வகிப்பார்கள்.

மேலே மூன்று சபைகள் ஆரிய குழுமத்தால் உலகெங்கும் ஏற்படுத்தப்பட்டாலும் தமிழ்ச்சங்கங்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அறநெறிகளுக்கும், அரசியல் சித்தாந்தங்களுக்கும் ஆற்றிய சேவை, ஆட்சி வீழ்ச்சியால், முடிவுக்குவந்தது.

அதிகாரப் பகிர்வின் அடிப்படையில், இம்மூன்று சபைகளும் பிற்காலத்தில் மீண்டும் மேலைத் தேசத்தவர்கள் கீழைத்தேசத்தில் அறிமுகப்படுத்தும் போது நீதிச் சபை நீதியரசர்கள் மூலமும் - அறிவியல் சபை ( பல்கலைக் கழகங்கள் ) வேந்தர், உபவேந்தர்களுடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் அரசியல் சபை, சபைநாயகர் ஊடாகவும் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் ஜனாதிபதியே எல்லாவற்றையும் ஒருங்கிணைப்பாளராகத் திகழ்ந்தார்.

பின்னால் பார்க்கவிருக்கும் கட்சி ஆட்சி முறை உருவாகி பரிமாணம் கண்டமையால் சபாநாயகர் மற்றும் ஜனாதிபதி கட்சியின ரால் தீர்மானிக்கப்படும் விடையமாகி விட்டமையால், நிர்வாக ஒழுங்கிணைப் பாளர்களாகவும், கையொப்பமிடும் கைப்பொம்மை யாளர்களாகவும், பாரம்பரிய கௌரவங்களுக்காக மட்டுமே, மதிக் கப்பட்டு வந்தாலும் ஒருநாட்டின் உயர்பதவி ஜனாதிபதிப்பத வியேயாம்,

## கட்சி ஆட்சிமுறை

கட்சி ஆட்சி முறை சோசலீச வளர்ச்சிக்கட்டத்தின் இரண்டாவது படியாகும். முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்ட சோசலீசகொள்கை, பலசாலியே ஆட்சியாளன் என்ற கொள்கைக்கு எதிராக உயர்நிலை கூட்டுறவு மூலமும் வம்சவழி ஆட்சி போட்டி பொறாமைகளை தவிர்க்கும் வாய்ப்பு இருந்தமையாலும் மக்களும் அரசசபையும் விரும் பியோ விரும்பாமலோ, வம்சவழி நபர் எவரோ அவருக்கே முடி சூட்டவேண்டுமென்ற வளக்கு மக்கள் மத்தியில் ஆளப்பதிந்தமையால் மிருகத்தனமும் கொடுமையுள்ளமும், பழைய குருடி கதவைத்திறவடி என மீண்டும் ஆட்சிக்குள் ஊடுருவும்போது, பசிபட்டினி, கொள்ளை களவுகள் கற்பளிப்புகள், சொத்துச்சூறையாடல், அறியாமை தலை விரித்தாடல், அறிஞர்களும் உயர்நிலை அமைச்சர்களும் கொலை செய்யப்படுதல் மக்கள் மிருகங்களிலும் கேவலமான அடிமைகளாக வும், யுத்தவீரர்கள் வாய்பேச முடியாத ஏவல் பேய்களாகவும், நிலை களுக்கு எதிராக, சிலசந்தர்ப்பங்களில் அரச உயர்குலம் புரட்சிமூலம் தலைமையை அகற்றி வேறு தலைமையை நியமித்தல், அல்லது வேற்றுநாட்டு மன்னர்களிடம் சரணடைதல், போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டமையும் மக்கள் கிளர்ந்தெழுந்து மக்கள் தலைவன் ஆட்சி அமைத்தலும், அல்லது அறிஞர் அறிவியல் சபை கொடுங்கோல் மன்னரால் அழிக்கப்பட்டு தனது எலும்புத்துண்டை நம்பியிருக்கும் அருவருடிகளின் உதவியுடன் ஆட்சி செய்யும் பட்சத்தில் மக்கள் மன மறித்து புரட்சிசெய்யும் ஆற்றல் மிக்க நபர்கள் இல்லாமல் போகும் பட்சத்தில் வேற்றுநாட்டு மன்னர்களிடம் மக்கள் தஞ்சமடைந்தமை யும், அகதிகளாக புலம் பேர்ந்தமையும், இவ்வாறான கொடுங்கோல் ஆட்சிகளால் ஏற்பட்டிருக்கின்றன என்றும் இதிகாசங்களும் புராணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் எடுத்தியம்புகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டமையையும் ஆணவம், கன்மம், மாயையால் நிகழ்ந்திருக்கின்றன

இன்நிகழ்வுகளுக்கு காரணம் முன்னர் சொத்துமுடக்கம், மனித பாவனைக்கு உதவாமல் போவதைத் தடுக்கவும். எல்லோரும் பகிர்ந்து மனிதவளத் தேவைகளை பகிர்ந்து நுகரும் பொருட்டு பொது உடமைக் கொள்கையூடாக நாகரீகம் கண்ட கூட்டுக் குடும்பமுறை, பிற்காலத்தில் சமதர்மம் சுயதர்மமாகவும், கீழ்ப்பட்டவர்களை திருப் திப்படுத்த முனையும்போது தானதர்மமாகவும் மாறி சோசலிசம் முதளாளித்துவத்துடன் இணைவு கண்டு, முதளாளித்துவ சோசலி சம், அடிமைச் சோசலிசமாக இருபிரிவுகளாகப் பிரிந்ததெனக் கண் டோம்.

எவ்விடயமும் அதன் உச்சநிலை எதிர் நிலையையே தோற்று விக்கும் என்ற உண்மைக்கமைய, அதிகூர் மழுமொட்டை, அதிக புத்தியுடையவன் ஜீவிக்கத் தெரியாதவன், இவ்வாறு சோசலிசத் தின் உச்சக் கொள்கையான, பொதுவுடமைக் கொள்கை அதை நிர்வகிக்கும் நபருடைய மனநிலை மாற்றத்தை பொறுத்து மிகக் கொடுமையான தன்மை கொடுக்குமெனப்பார்த்தோம்.

இவ்வாறு தனிமனித தீர்மானங்களுக்கு அவர் தன்னைவிட்ட வேறு ஆள் இல்லை என்கின்ற இறுமாப்பின் வழியில் செயற்படு வதையும், தன் விருப்பு வெறுப்பை அனுசரித்து போகாதவர்களை கொலை செய்தலையும் முடிவுக்கு கொண்டுவர எண்ணியே கட்சி முறையிலான ஆட்சி அதாவது மக்களாட்சி மலர்வதற்கு முதற்படி யாக, சோசலிச வளர்ச்சியின் பிரகாரம் இளைஞர்களும் அறிஞர்க ளும் இணைந்து கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடி அப் போராட்டத் தியாகத்தின் விளைவால் பங்குடமை கட்சி உருவாக் கப்பட்டது. பங்குடமை எனப்படுவது, இளைஞர் கொண்ட தியா கத்திற்கு ஈடாக ஒரு பொது சபையையும், அப்பொதுச்சபை ஒரு நிர்வாகத்தையும் தலைவனையும் கொண்ட அமைப்பானாலும் சில முக்கிய விடயங்களை தலைமையால் முடிவெடுக்கவேண்டுமென தீர் மானிக்கும் விடையங்களில் ஓர் உயர் சபையையும் நிறுவி, தலை மத்துவம் சுயநலப்பாங்கில் எடுக்கும் முடிவுகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக அவ் உயர்சபை ஒரு சில உறுப்பினர்களுடன் அமையப் பெற்றது. இதுவே பொதுச்சபை, மத்தியசபை உயர்சபை தலைவன் என்ற மரபு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கட்சி முறையிலான கொள்கைகளும் காலப்போக்கில் பங்குடமையும், பொதுச்சபையும், மத்தியசபையை தெரிவு செய்யும் நிலை இக்கட்டாவதால் மத்திய சபையில் இருந்து இல்லாமல் போகும் உறுப்பினர்களை தலைவனே நியமிக்கும் வாய்ப்பு ஏற்பட்டமையால் தனக்கு விஸ்வாசமானவர்களையும் தனக்கு வேண்டியவர்களையும் நியமித்து காலப்போக்கில் மத்தியசபையை முற்று முழுதாக தனது சட்டதிட்ட யாப்புக் கொள்கைகளை இழந்து தலைவனின் விருப்பு வெறுப்புக்களை செயற்படுத்தும் ஒருங்கிணைக்கும் குழுவாக மட்டும் செயல்பட விளைந்தமையால், பங்குடமை, தனியுடமையாக மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டமையால் சோசலீசத் தன்மையையும் நல்ல நேர்க்கங்களையும் எண்ணிச் செயல்ப்பட விளைந்த தியாகங்கள் வீண்போயின, இவ்வாறன கட்சிகள் கொள்ளைக் கூட்டம் போல் மன்னனின் தேவைக்கு கட்சியும், கட்சியினர் தம் உண்மை நோக்க பங்குடமை இழந்து எலும்புத் துண்டுகளுக்காய், மக்களையும், இத் தலைவனையும், கட்சியையும் கொண்ட மககள் உலகமக்களிடம் கொள்ளையிட்டு அவர்களையும் தமது தொள்ளைத் தலைவனின் விருப்புக்காகவும் தேவைக்காகவும். உலக மகாயுத்தங்கள் தொடராக ஏற்பட்டமையால் மக்கள் மனங்களில் பொதுவுடைமைச் சோசலீசம் ஒரு நீங்காத வடுவையும் வெறுப்பையும் ஏற்படுத்தி விட்டிருந்தது.

## மக்களாட்சியும் மீண்டும் சோசலீச மரபும்.

மக்களாட்சி மலரு முன் உலகின் பெரும் பகுதிகள் குடி (முடி) யாட்சி (கூட்டுக் குடும்ப ஆட்சி) நிலவியதனால் மிக நல்ல அம்சங்கள் பொருந்திய சோசலீச மக்களாட்சி மலர நல்ல வாய்ப்பாக அமைந்ததெனலாம். காரணம் தேசவளமைகளைப் பேணவும். சட்டங்களை இயற்றவும் மக்களை நிர்வகிக்கவும் யாரிடம் ஒப்படைப்பது என்கின்ற கேள்வி எழுகின்றபோது, முன்னைய முடியாட்சியாளரிடமா? தனிக்கட்சியிடமா? என்ற தவிர்க்கமுடியாத கேள்வியே, மக்களால் தெரிவு செய்யப்படும் கட்சி, நிர்வாகத்தை இயக்க ஆலோசனைச் சபையாகவும், சட்டத்தை இயக்கும் சபையாகவும், நாடாளுமன்றம் தனது பிறப்பைப் பெற்றது. நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் பெறும் கட்சி கவணஜெனறலின் ஆலோசனையுடன் மந்திரிகளை நியமிக்கும், கட்சியின் பெரும்பான்மை செல்வாக்குப் பெறும் நபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம மந்திரியாவார், எதிர்க்கட்சியின் பெருபான்மை பலத்தைபெறும் நபர் எதிர்க் கட்சித்தலைவராக இருந்தாலும், கவண ஜெனர லுக்கு அடுத்தபடியான பதவி வழி நபராக சபாநாயர்கள் விளங்கிய மையால் சபையை கட்டுப்படுத்தும் அதிகாரம் இவரிடம் இருந்து இத்துடன் சபையின் முடிவுகள் இவரின் உறுதிப்படுத்தலுடன், சவண ஜெனரலின் கையெழுத்திடும் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத் தப்படு மென்பதாகும். இவ்வாறு இயற்றப்படும் சட்டங்களை ஆணைக் குழுக்களும், நீதிநிர்வாகமும் செயல் படுத்தினாலும் இவ் எல்லா விடையங்களையும் ஒருங்கிணைக்கும் நபராக கவணஜெனரலே விளங்கினார். முப்படைகளின் தளபதியும் தலைவரும் இவரேயா வார்.

இவ்வாறான முடியாட்சி படிப்படியாக மக்களாட்சியாக தேசிய சுதந்திரத்தையும் அங்கீகரித்து முற்றாக தம்பிடியை இளக்கியபோது கவணஜெனரல் பதவி ஜனாதிபதியாக மாற்றம்கண்டு, பல்லுப்பிடுங்கிய பாம்பு போல் நிர்வாகத்தை ஒருங்கிணைக்கும் நபராகவும் அதேபோல் சபைநாயகர், சபையில் மட்டும் சண்டித்தனம் காட்டும் நாயகர் ஆனார். இவர் இரகசியவாக் கெடுப்பு மூலம் நடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுவரானமையால், கட்சிக்கு கட்டுப்பட வேண்டிய வரானார். இதேபோல் ஜனாதிபதியும் தெரிவு செய்யப்படுவதால் இவரும் கட்சிக்கு கட்டுப்பட வேண்டியவரானர். எனவே முதலாளித் துவமில்லாமல் கட்சி ஆட்சி செய்யும் பாங்கு இலவசக்கல்வி இலவச மருத்துவம், சேவை மனப்பாமை கூட்டுறவு ஊக்குவிப்பு உள்ளூர் உற்பத்தி என்பன சோசலீசத்தின் முக்கிய அம்சங்களாகும் இதைவிட சோசலீச நாகரீகத்தின் நவின பண்பியல்பின் பிரகாரம் ஒவ்வொரு தேசிய இனங்களும் தமது சுய ஆட்சியை நிலை நிறுத்தக் கூடியதான அமைப்பே ஒரு முழுமையான சோசலீசமாகும்.

## ஜனாதிபதி ஆட்சிமுறையும் முதலாளித்துவமும்

இவ்வாறு சோசலீச நாகரீகப் பாதையில் நீதித்துறை கண்ட பரிமாற்றத்தைக் கண்டோம். இவ் இடை நிலைக்கு விழுமியமாக உலகில் முடியாட்சி இராணுவ ஆட்சி, சோசலீச கட்சியாட்சி ஜனாதிபதி ஆட்சி மக்கள் ஆட்சியென ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்தையும், இன் நிகழ்வுகள் பிரதிபலிக்கின்றன, இருப்பினும் சில இடங்களில் பிற்போக்குத் தனங்களும் பெற்றிருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாட்சியெனப்படும் போது ஆளுநரின் தனிப்பட்ட செல்வாக்குப் பிரயோகங்கள் ஏற்படும் வாய்ப்புக்களே நிறைய உண்டு இதைவிட மிகுந்த நல்ல சோசலிசப்பழம் ஜனாதிபதிப்பதவியை அலங்கரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டால், மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் விடயங்கள் மற்றும் கூடியளவில் ஊழல் இடம்பெறக் கூடுமென நினைக்கும் அதிகாரங்களை மட்டும் நல்நோக்கத்திற்காக தன்னிடம் வைத்துக் கொண்டு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் விடையங்களில் குறியாகவே இருந்து செயல்படுவர் இப்படியான நல்ல குணமுள்ளவர்கள் வெறிகொண்டு இப்பதவியை நோக்கமாட்டார்கள். இப்பதவியை சேவை நோக்கமாகவும் மக்களை நல்வழிப்படுத்தலையும், தியாகமாகவும் நோக்கமாகக்கொண்டு செயல்ப்படுவார்கள். இப்படியாக நல்லவர்கள் கைகளில் இப்பதவி போகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர மற்றும் படி இப்பதவி கூடிய அதிகாரங்கள் இன்றி இருப்பதுவே மேல், இப்பதவிக்கு கூடிய அதிகாரங்கள் கிடைக்கும் போது, இந் நபரின் குணாதிசயங்கள் மக்களில்பிரதிபலிக்கும் என்பதாலும், இந் நபர் சுயநலகாரனாகவும், சந்தேகபேர்வழியாகவும்இருந்தால்மக்களும்காலப்போக்கில் அவ்வாறே மாறுவார். முதலாளித்துவ இவ் அமைப்புக்கு கூடியளவு கைகொடுப்பது அறியாமையேயாகும்

# 4 கல்விக் கலாச்சாரம்

கல்வியின் ஆரம்பம் மொழியின் ஆரம்பத்துடன், தொடக்கம் பெறுவதால் ஒரு நபர் எழுத வாசிக்கத்தெரிந்தால் அவன் கல்வியறிவுள்ளவன் என்னும் பட்டியலுக்குள் வந்துவிடுகின்றான், ஆரம்பகாலத்தில் எழுத்துமொழிக்கு முன்னரே, ஆன்மீகக்கலை, அரசியல்தொழில் நுட்பம் என்னும் கலைகள் ஆரம்பிக்கப்பட்டு வழி வந்தமையால்அவ்அறிவை அனுபவம்கேள்வி ஞானம்என அழைக்கப்பட்டுவந்தது.

இன்று கல்வியறிவு எனப்படுவது எழுதவாசிக்க தெரிதல் என்னும் பொது அத்திவாரத்தில் கட்டப்பட்டாலும், கல்வியறிவல் பல தராதரங்கள் உண்டென்பது நாம் அறிந்த உண்மையாகும்.

இன்றுபோல் அன்றும் பாமரமக்கள் எழுத்தறிவில் அதிக அக்கறை காட்டவில்லையாதலால், நாகரீகமடைந்த குழுமமே குருகுல முறைமை மூலம் கல்வியைக் கற்று மொழி அறிவுடன் திகழ்ந்தனரெனலாம். இம் முறைமையின் காரணமாக குருதட்சணை கனிஷ்ட சிரேஷ்ட தரங்கள் மாணவரிடையேயும் இன்றுகாணும் ராக்கிங் முறையும், காணப்பட்டதெனலாம், இம்முறைகள் முதலாளித்துவ பிரதிபலிப்புக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல தரப்பட்ட அம்சங்கள் கல்வியலில் காணப்பட்டலும், தமிழ்ச்சங்கம் காட்டும் அறிவியல் சபையே, அன்றைய பல்கலைக்கழகமாகும். இச்சபைக்கு தலைமை வகிப்பவர் வம்சாவழி அரசரானாலும், அறிவின்மூத்த பழங்களும் அறிஞர்களும் அச்சபையின் அங்கம் வகிப்பதால் அரசன் வெறும் தீர்ப்புச் சொல்லும் நபராகவே பெரும்பாலான நூல்கள் காட்டுகின்றன. ஆனால் கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின் கீழ் இவையெல்லாம் எதிர்மாறு, அரசன் தன்னையே நல்லன் என்பான், அறிவாளி என்பான், கடவுள் என்பான். தான் பூனைக்கு மூன்றுகால் என்று கூறும் போது அதை எதிர்த்து கூறுபவர் தலைகள் சிவப்படும் என்பதாகும். அதை சரியெனக் கூறுபவர்களையே மன்னன் தன் விஸ்வாசியெனக் கருதுவான் இவன் தன்னைவிட அறிவில்குறைந்தவர்களை சபைஅங்கத்தவர்களாக நியமிக்கவிரும்புவான். தனக்கு கீழ்ப்பட்ட அனைவரையும் வாய்பேசா அடிமைகளாகவே உருவாக்கவிரும்புவான், இப்படியான மன்னர்கள் கூறும் தீர்ப்புக்கள் சந்தர்ப்பவாதமாகவே இருக்கும். முன்னுக்கு பின்முரண்படும். ஆனால் ஒன்று உண்மை. இப்படியானவர்கள் காலத்திலேயே கூடியமக்கள் துறவற வாழ்க்கைக்கும் அறிவின் உச்சத்திற்கும் செல்லும் வாய்பு - ஏற்படுகின்றது.

இவ்வாறான காலத்தில் அகிம்சையின் உச்சமும் அன்பின் இருப்பிடமும், அறிவின் பிரபஞ்சமும், ஞானவடிவான ஜேசு பிரான் கொடுங்கோலர்களால் சிலுவையில் அறையப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி அவரின் உன்னத கொள்கை கொச்சைப்படுத்தப் வேண்டுமென்பதற்காக இரு கள்வரும் அவருடன் சேர்த்து சிலையில் அறையப்பட்டார்கள் என்பது அவர்களின் கெட்ட நோக்கம் மேலும் வெளிப்படுகின்றதெனபாகும். இவ்வாறு அன்றைய அரசர்களின் சுய நலப்போக்கே, கொடுமைக்கு எதிரான குரல், சாத்தானுக்கு எதிரான போர் என்னும் கொள்கைகளூடே சமதர்ம சிந்தனையையும் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் அன்பையும் மனித மேம்பாட்டையும் நோக்கமாக கொண்டு, இறைவழிபாட்டையும் சாத்தானின் கொடியதன்மைகளுக்கெதிரான தத்துவங்களுடன் பிறந்தது, தத்துவ அறவியல் சோசலிச சமயக்கருத்துக்களாகும்.

இவ்வாறான கருத்துக்கள் அரசசபையின் அங்கீகாரத்தை பிற்காலத்தில் பெற்றமையாலே சமயசார்பு ஆட்சிகள் தோன்றின. இருப்பினும் அக்கால சோசலிசக் கொள்கையாலும், அரச சபை முன்வைக்கப்படுகின்றபோது, விண்ணியல் (விஞ்ஞானம்) அதாவது சூரியன் உட்பட பூமியின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம் பிரபஞ்ச இறைபாடல் ஆட்சிமுறையும் சோசலீசதர்ம அரசியல் மனித நாகரீகம் மனிதத்தோற்றமுட்பட மனிதனால் நல்நோக்கத்திற்காக கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டங்கள் (அறங்கள்) எனப்பல்வகையான கருத்துக்களும் ஜாதிககதைகள் என்பன உட்பட ஒருங்கிணைப்பாகவே அரச சபைமுன் வைத்து நிருபிக்க வேண்டுமென்ற நியதி இருந்திருக்கவேண்டுமெனக் கொள்ள இடமுண்டு

எனவே இவ்வாறு முன்வைக்கப்பட்டவையே இதிகாசங் களாகவும் புராணங்களாகவும் வரலாறுகளாகவும் இலக்கியங்களாகவும் காவியங் களாகவும் பாடல்களாகவும் திருக்குறள்கள் (கவிதை) ஆகவும் இன்று நாம் காணும் அறிவியல் பொக்கிசங்களாகும்.

## இன்றைய கல்வியும் சோசலீசமும்

மக்களாட்சி சோசலீச, அமைப்பு அதிகப்படி உன்னத அரசியலாட்சி மலருவதற்கு முன் கல்வியல் முதலாளித்துவ பாணியில் செயல்ப்பட்டதை யாரும் மறுக்க முடியாது. மற்றும் கல்வி முதலாளித்துவ பாணியில் செயல்ப்பட்டமைக்கு காரணம் கல்வியல் ஒரு முழுமையை அடைந் திராமையும் முரண்பாடுகளும் அத்துடன் கல்வியில் யாரும் முழுமை யானபாண்டியத்தைபெற்றிருக்கவில்லையென்பதாகும்.ஔவைப்பாட்டி சொன்னது போல்கற்றது கைமண்ணளவு கல்லாதது பேர்உலகளவாகும் எனவே அரசசபை முறையிலும் முடிவெடுக்கப்படும் கல்வியல் ஆராய்ச் சிகள் குருகுல முறையில் போதிக்கப்பட்டு வந்தமையால் மாணவர் ஆதிகளவாகக் கேள்விகேட்டு படிப்பைக் குளப்பி அடிக்கக் கூடாது என்பதற்காக ஓரளவுக்கு திணிப்பு அடிப்படையிலும் மாணவர்களுக்கு புலமைச் சான்றிதழ்களை வழங்கும் போது முதலாளித்துவ அடிப் படையில் குருவின் விருப்பையும் ஒழுகத்தையும் குருபணிவையும் கூறியபாடல்களை மட்டும் படித்து சோதனை எழுதியவர்களையும் குருவின் திருப்தியின் அடிப்படையில் மட்டும் பட்டங்கள் வழங்கும் நடைறையும் பொதுத்தேர்வு அற்ற முறைமையும் இருந்தமையால். மீள் ஆய்வு இருக்கவில்லை, ஆனால் குரு கொடுத்த அங்கீகாரம் சரியானதா பிழையானதா என்பது அக்கல்வி பட்டம் பெற்ற நபரால், அக்கல்வியை நடைமுறையில் பாவனையிலும் போட்டிகளிலும் பிரயோகிக்கப்படுகின் றபோதே வெளிப்படுமென்பதாகும், இதன்ம்பாதே குருவின் திறமை வெளிப்படுமென்பதாகும். இதைப்போல் ஆய்வுகள் ஆராய்ச்சிகள் பட் டங்கள் பெறும் உயர்நிலை பல்கலைக் கழகங்கள் அரசபையே எனப் பார்த்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றைய இலவசக்கல்வி முறையும் பொதுப்பரீட்சைகளும் சோசலிசத்தின் நல்ல அம்சங்களும் இதைவிட (செடுல்காற்ஸ்) பிற்பட்ட மக்களுக்கு கூடியசலுகைகளும் சமன்படுத்தல்களும் (தரப்படுத்தல்)ஒரு ஆரோக்கியமான முழுமையான நாட்டில் கல்வி அறிவுப் பரம்பலுக்கும் ஒட்டோமற்றிக் புறமோசன் தடையற்ற வகுப்பேற்றம் ஒருவன் பத்து வருடம் பாடசாலைக்கு போய்வந்து இலவசக்கல்வியை பெறுதலென்பது அவன் சித்தியடைகின்றானா இல்லையா என்பதைவிட கல்வியின்தேவை அவனுக்கு உணர்த்துவதற்கும் பழக்கவழக்க ஒழுக்கத்தை பெறவேண்டுமெமன்பதும்மனித இனம்பண்பாட்டைப் றெவேண்டுமென் பதே இதன் நோக்கமாகும் இதை குறிப்பிடும் கோலோக்கியல் வாசகம், கல்வி வாசனை, கல்வி கேள்வி, மழைக்கு கூடவாகிலும் பாடசாலைக்கு கூடபோதல் மேற்படி வாக்கியங்கள் கல்வியை கற்பது என்பது மேலதிகம் ஆனால் கல்வி என்றால் என்ன என்பதை வாசனைமூலம் மனத்தினால் (உணர்தல்) கேள்வி எழுத்து அறிவு இல்லாவிட்டாலும், செவிவழி அறிதல் மற்ற மூன்றாவது வாக்கியம், பட்டம் பரீட்சையில் சித்தி என்பன பெறா விட்டாலும்,பாடசாலைக்குப் போயிருக்க வேண்டிய தேவை உணர்த்துவன ஆகிவிடுகின்றது இவை ஒருநாட்டின் ஆரோக்கியமான, முழுச் சமூகமும் கல்வியின் மகத்துவத்தை பெறவேண்டுமென்பதாகும் இதைவிட மூளைகூர்ப்பியல்புக்கும் கூடியதிறமையுள்ள பிள்ளை இவ் வழியால் பிறக்கும்போது பிறக்கும் குழந்தைகள் தனது வம்சவழியினரின் அறிவியல் தன்மையை வெளிப்படுத்தக்கூடியதாக அமைகின்றது

எனவே இக்குறிப்பிட்ட வயதினர் திருமணம் செய்துகொள்வது அல்லது அடிமைத்தொழில்களில் ஈடுபடுத்துவது, யுத்தத்திற்கு பயன் படுத்துவது மன்னிக்கமுடியாத குற்றங்களாகும். ஒரு சோசலிச நல்ல தாய் தந்தையரின் பங்கு இவ்வயது வரை அவர்களை பராமரிக்கவேண்டியதாகும் எனவே இவ்வயதின் பிற்பாடே குலத்தொழிலாகிலும், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிலாகிலும் மற்றும் திருமணம் செய்தல் தொடக்கம் மேறபடிவயதினர் தம்சொந்தக் கால்களில் நிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்பதாகும்.

இதைப் போல் ஒரு நல்லம் சங்கள் பொருந்திய சோசலிச அரசும் இவ்வயதைக் கடக்கும் பருவத்தினருக்கு, தொழில் நுட்ப மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளையும், வெளிநாட்டு வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு பயிற்சிகளையும். உயர்கல்வியில் சித்தியடைந்தவர்களாயின் கூடியளவு எண்ணிக்கையில் பல்கலைக்கழக கல்விக்கு அனுமதியளிக்க வேண்டுமென்பதாகும்.

இலங்கைத் தமிழர் இந்த விடையத்தில், இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலேயே, சுயாட்சி உரிமையை பெற்றிருப்பார்களானால், என்றும் பிற்பட்டவர் பிற்பட்டவராகவே இருந்திருப்பார் காரணம், இந்திய அரசியல் சாசனம் சமயசார்பற்றது காரணம் பல இன சமய, மொழி, இனமக்கள் வாழ்ந்தமையேயாகும். சமய சார்புக் கொள்கை அற்றதாகவும் , ஆனால் வடகிழக்கு இலங்கையில் கூடியளவு வம்ச வழித் தீவிரவாதிகள் இருந்தமையால், மனிதர்கள் அடிமைகளாக்கப்பட்டிருப்பார்கள்.

ஆனால் இன்று தமிழ்சோசலிச கொள்கைகளின் பிரகாரமும் முன்னைய தமிழர் பாரம் பரியத்திற்கமையவும், சுயாட்சியைபெற்றால் தன்மானத்துடனும், தன் ஆட்சியுடனும் கௌரவத்துடனும் சகோதரத்துவத்துடனும், ஒரு முழுமையான அறிவியல் சமுதாயமாக திகழமுடியுமென்பதாகும்.

இவ்வறிவியல் பார்வையே அன்னறய பிரசங்கங்களும் அறத்தத்துவ விரிவுரைகளுமாகும். இங்குபிரசங்கம் எனப்படுவது சோசலிச தமிழ் சங்க வரலாற்றில் அறிவியல் சங்கத்தின் முக்கிய பிரிவே பிரசங்மாகும், இது மக்களுக்கு செவிவழியே அறிவைப் புகட்டும் பிரிவாகும், இச்சங்கம் மக்களிடையே பேச்சுப் போட்டிகளையும், பாட்டுப் போட்டிகளையும் நடத்தும் நல்ல சபையாகும்.

## 5 உடை அணிகலக் கலாச்சாரம்

உடை அணிகலம் ஆரம்பகாலத்தில் இயற்கையின் பாதுகாப்பின் பொருட்டே ஏற்பட்டதெனலாம். மிருகங்களின் கொம்புடன் கூடிய மண்டையோடு தலைக் கவசமாகவும். மிருகங்களின் எலும்புகளும் தோலும் உடைக்கவசமாகவும், புலிப்பல் மற்றும் எதிரிகளிலிருந்து தன்னை பாதுகாக்கக் கூடியதான எலும்புகளை ஆயுதங்களாக மனிதன் தன் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டமைபோல் பிற்காலத்தில் உலோகங்களையும் கற்களையும், உடற்கவசமாக பாவிக்கத் தொடங்கினான், இவ்வாறான தன்மைகள் உலகம் முழுக்க குழுமங்களாகக் காணப்பட்ட மனித குழுமங்கள் அனைத்தும். பயன்படுத்தத் தொடங்கினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிய சூழமே முதன் முதலில் நீண்ட நெசவுத்துணியை இடுப்பில் கட்டி இவ் உடையை கொடுக்குப் போல் இருகால்களுக்கிடையாக சுருக்கிட்டு எடுத்து பின் அத்துணியின் மிகுதிப்பகுதியால் உடல் முழுவதையும் சுற்றிக்கொள்ளும் வெள்ளைநிறத்திலான நிலத்தில் அரையும் நீண்ட துணியே, இன்றைய நவநாகரீக உடை அலங்காரத்திற்கு அடிநாதமானது. பிற்காலத்தில் துணியை வெட்டி தைக்கும் அறிவை பெற்றுக் கொண்டமையால் இவ் உடை அடிப்படையே, கால்ச்சட்டையாகவும், சேட்டாகவும் கீழைத்தேசத்தில் நாட்டிய மற்றும் அரச உடைகள் பிரதிபலிக்கும் இன்றைய பக்கிபாணியிலான உடையாகும். ஆரியர்களால் நீண்ட வெள்ளைத் துணியிலான, உடை உலகெங்கும் அறிமுகப்படுத்தபட்டாலும், பிற்காலத்தில் ஒவ்வொரு கலாச்சாரக் குழுமங்களும் தமது அறிவியல் விரிவாக்கத்தின் தன்மையை பொறுத்து இவ் அடிநாதமான நீண்ட உடை பல வடிவிலான நாகரீக உடைகளாக பரிமாற்றம் கண்டன எனலாம். இப்பாரம் பரியத்தை நினைவு கூருவதே இந்துசமயத்தில் நாம் காணும் கொடியேற்றமும் கொடிச்சீலையுமாகும் இங்கே கொடிகம்பம் மானிடனரயும் சீலை ஆன்மாவையும், கயிறு மலங்களையும் குறிப்பதாகும்.

இதைப்போல் பாரம்பரிய உடை அதாவது அரசஉடை பின்பக்கமாக நீண்டு நிலத்தில் தொங்குவதையும் மேற்கத்தைய திருமண வைபவங்களில் பெண்களில் உடை நீண்டு நிலத்தில் அரைவதையும் இந்தியாவில் பிராமணப் பெண்கள் கொடுக்குப் போன்ற இன்றைய காழ்ச்சட்டை போன்று நீண்ட சீலையை அணிவதையும் இதற்கு ஆதாரங்களாகும்.

இதைவிட மூன்று பெரும் சமையங்களும் பெண்களின் உடலை முழுமையான உடையால் மறைத்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக தமிழ் பாரம்பரிய திருமண நடைமுறைகளில் பெண்கள் முகம் மறைக்கப்பட்டே திருமண மேடைக்கு அழைத்துவரப்படுகின்றனர் என்பதாகும். இதைப்போல் மேற்கத்தைய வெள்ளை நிறத்திலான நீண்ட உடையும் இதையே சான்று பகர்கின்றது.

பிற்காலத்திலேயே உடை சாயம் இடுதல், வெட்டி அளவு துணியாக உடைதைத்தல் என்பன பிற்கால அறிவியல் நாகரீமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட ஆரம்பகாலத்தில் பாதுகாப்பு அணிகலங்களாக திகழ்ந்தவை பிற்காலத்தில் அழகு சாதன பொருள்களாகவும், பதவி வித்தியாசத்தை காட்டும் சீருடையாகவும் திகழலாகின. உதாரணம் அரசவம்சத்தை சேர்ந்தவர்கள், தலைமுடி, தலைப்பாகை மற்றும் தோளில் போடும் அம்பிறாந்துணி, மார்பில் போடும் அட்டியல்பதக்கம் (நெக்லஸ்) என்பன மார்பு கவசங்களாகவும், பிராமணர்கள் அகிம்சையை குறிக்கும் பொருட்டு, தோளில் போடும் அம்பிறாந்துணி போன்று இதன் அர்த்தத்தை குறிக்கும் பூநூலையும், இங்கே பூநூல் என்பது இரு அர்த்தத்தை குறிக்கும். பூண் போடும் அம்பிறாந்துணியாகவும் அகிம்சையின் பால் பூ ஆகவும் நூலாகவும் கொள்ளலாம்.

பூண் இடும் அம்பிறாந்துணியின் மறுவடிவமேதாலிக் கொடியாகும். தாலியென்பது புலிப்பல்லுவடிவிலான பழைமையான ஆயுதத்தையும், விஸ்ணு வழிபாட்டுச் சின்னமான "பூ" வடிவத்தையும் (ஆங்கிலச்சொல் )குறிக்குமென்பதாகும்.

இங்கே அம்புவில்லு ஆயுதங்கள் தொங்கவிடும், உலோகத்திலான கொடி அதாவது பூண் இடும் கொடி பெண்களுக்கு அணியப்பட்டதன் நோக்கம் ஆரம்பகாலத்தில் பெண்கள் அடிமை கொள்திருமணத்திற்குட்பட்டமையால் ஒரு அரசவம்சத்திற்குரியவன் தான் மணம்முடிக்கும் பெண்ணுக்கு தன்குல அந்தஸ்தை அவளுக்கு சூட்டுதலை நினைவுகூருதலாகவும், இதன் பின்னணியே மாலை மாற்றுதலாகும்.

## மேலங்கிக் கரையோரும் அரசவம்சமும்

புதிய கருத்துக்கள் நூல் தொடரில் நாம் பார்த்ததுக்கமைய, ஆரிய ஆட்சிப் பாரம்பரியத்தில், அவர்களின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் அனைத்திலும் அவர்கள் தமது உறவினர்களின் மேல் நிலையிலேயே அமர்த்தி, ஊர்பெரியவர்களாகவும், ஜமீந்தார்களாகவும் குறுமன்னர்களாகவும், பெருமன்னர்களாகவும். சக்கரவர்த்திகளாகவும் ஆட்சியமைத்தார்கள் எனப்பார்த்தோம். இன்நிலை இயற்கை சார்ந்து வாழ்ந்த திராவிட இனத்தை மொழிரீதியாகவும், நிறுவனரீதியான சேரசலீச சமயக்கொள்கைகளுக்கு நாகரீகமடையச் செய்ததெனப் பார்த்தோம். இந்தவகையில் நெய்தல் பிரதேசத்தில் கடல் பிரதேசத்தையும் கடற்படையையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தவர்கள் மேலங்கிக்கரையோராகும். இவர்களே தென் இலங்கையிலும், திருமலையிலும், மட்டக்களப்பிலும், தீவகங்களிலும் உயர்சாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரச் சிங்களவராகவும், தமிழ்ப் பிரதேசத்தில் மேலங்கிக் கரையோராகவும் திகழ்கின்றனர் என்பதாகும். இவர்களே முன்னைய கடல் ஆட்சியாளர்களாக விருந்தாலும் பிற்காலத்தில் சமயசார்புக் கொள்கை காரணமாக சிங்களவராகவும், தமிழராகவும் பிரிவடைந்த வரெனலாம்.

இங்கே மேலங்கி யெனப்படுவது பதவி வழி சீருடையாரும், தொழில் போடும் சால்வை அம்பிறாந்துணியின் வரலாற்றைக்கூறும் சால்வையே மேலங்கி எனப்படும்.

## பதவிவழிச் சீருடை கீழைத்தேசத்தில்

இனம், சாதி, மொழிப்பிரிவு, (வர்ணசாஸ்திரம்) தொழில் பிரிவு என மனிதரிடையே பல பிரிவுகள் காணப்படுகின்ற போதும் இனச்சாதிப் பிரிவான, வர்ணசாஸ்த்திரத்திற்கு வித்திட்ட ஆரியதிரா விட வெள்ளை கருப்பினம் கீழைத்தேசத்தில் கலப்புத் திருமணங்கள் செய்தும் மற்றும் பல வழிகளில் சீழ்ப்பட்ட மக்களை கலப்பினமாக்க செய்த முயற்சிகளின் விளைவே சிறிராமனின் தோற்றம். இங்கே கரிய செம்மலான ஆரிய திராவிட கலப்பு இன அரசவம்சம் தோன்றியதில் இருந்து இனம் சாதி அழிந்த பதவிவழி வர்ணசாஸ்திரம் (நிறப்பிரிவு) உருவானது. இவ்வாறான நாகரீக வழியிலே பலமொழி பேசும் மக்கள் உருவானார்களெனப் பார்த்தோம். இங்கே தொழில்பிரிவு இந்துமதக்கொள்கைக்கு ஆதரவான திறைமையும்மூளை அறிவியல் பிரையோகமும் நுட்பமும் கொண்ட தொழில் உயர்நிலை அதாவது வைஸ்ணவர் என்னும் வகுப்பினருக்குள் வந்தவரெனப் பார்த்தோம். எனவே அழிந்துபோன இனம் சாதியின் பெயரால் பதவிப் பிரிவு வர்ணசாஸ்திரம் எனக் கூறப்பட்டாலும் இவை வெறும் பதவிப் பிரிவேயாகும்.

ஆனால் தொழில் பிரிவு எனப்படுவது பொதுமக்களிடையே (சூத்திரர்) காணப்படும் வேளாளர், மற்றும் கமக்காரர் தொடக்கம் பிறதொழில் பிரிவாகும், இது ஓர் இனப் பிரிவோ சாதிப் பிரிவோ அன்று, வெறும் தொழில் பிரிவேயானாலும் பணம், கலப் புத்திருமணம், சமய ஆசாரம், நற்தொழில் அறிவு, அழகு எனப்பல தரப்பட்ட அம்சங்களால் யாழ்பிரதேசத்தில் வேளாளர் உயர்ந்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரமுடிந்தாலும் இந்துசமயத்தால் வெறுக்கப்பட்ட சாத்தான் வழி பாடு செய்வோர் அதனுடன் இணைந்ததொழில் செய்வோர் சமூக ஆசாரங்களைக் கெடுக்கும் தொழில் செய்வோர், தொழில் இன்னும் கீழ் நிலையில் கணிக்கப்படுகின்றன.

தீவகம், திருமலை, மட்டக்களப்பு, வன்னிபோன்ற பிரதேசத்தில் வேளாளர் பெரிதாக மற்றைய தொழில் பிரிவினர்களில் இருந்தவர்களை வேறுபடுத்தும் அம்சங்கள் குறைந்தவர்களாக இருந்தாலும். யாழ் கலாச்சாரம் தற்போது அங்கு, தாக்கங்களை விளைவிக்கத் தவற வில்லை.

## பதவிவழிச் சீருடை மேலைத்தேசம்

கீழைத் தேசத்தில் எவ்வாறு பதவி வழி குடும்ப ஆட்சி மக்க ளாட்சி வரை நிலவியதோ அதேபோல் மேலைத் தேசத்திலும் குடும்ப வழிப்பதவியே மக்களாட்சி வரை நிலவியந்திருக்கின்றதென் பதாக வரலாறுகள் சான்று பகர்கின்றன. இதன் போது தலைப்பா, தலைமுடி அம்பிறாந்துணிபோன்ற தோலினாலான தோள்பட்டி பதவி நிலையை குறிக்கும் உலோக ஸ்ரார்கள் போன்று பல உயர் நிலைப் பதிவிகளைக் குறிக்கும் படைவீரர்களின் உடை தொடக்கம் அரசர்களின் உடைகள் இருக்கின்றதெனக் கொள்ளலாம்.

பல்கலைக்கழக முறை நீதித்துறை நீதியரசர்கள், மற்றும் சபாநாயகர் பதவி என்பன அரசசபையினரின் பதவி வழி வந்தஉடைகள் என்பது பாரிய உண்மையாகும். ஜனாதிபதிப்பதவியும் அரச பதவி வழி வந்தாலும் முன்னர் ஜனாதிபதி, இராணுவ சீருடையணிந்த கவர்ண ஜெனரலின் உடையமைப்பு, இராணுவப்பாணியில் இருப்பதால், ஜனாதிபதிப் பதவிக்குரியவர் தமது தேசிய உடையுடன திகழ்கின் றனர் என்பதாகவும், எப்போதும் ஒரு ஜனாதிபதிப்பதவி, நிறைவேற்று அதிகாரம் உண்டோ இல்லையோ ஜனாதிபதியே நாட்டின் முப்ப டைத் தளபதியாவார்.

## குடும்பாதிக்க ஆட்சி உலகெங்கும் வீழ்ச்சியும், பதவி மற்றும் தொழில் எட்டு மணித்தியால கடமை களாயின

மக்களாட்சி மலருமுன் இருந்து ஆண்டான், அடிமை குடும்பவழி வரும் பதவிமுறைபடிப்படியாக மக்களாட்சி பிரசங்கங்களின்ஒளிகண்டு இருள் அகன்றது போல், தொழிலாளவர்க்கம் விடிவைநோக்கி எட்டு மணித்தியாலக் கடமை, ஓய்வு, வாக்குரிமை என்பனவற்றிற்காக இரத் தம் சிந்தி போராடத் தொடங்கிய தெனலாம். இப்போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியே குடும்ப ஆதிக்க அடித்தளத்தை உடைத்தது எனலாம் இத்துடன் வாக்குரிமை, இலவசக்கல்வி, இலவச அரசசேவை இலவச மருத்துவம், ஆகியவற்றின்பால் கல்விஅறிவியலிலும் பணவிடையங்களிலும், சேமிப்புடனும் முன்னுக்கு வரமுடிந்ததெனலாம்.

முன்னர் தொழிலாளவர்க்கம் தொடர்ந்து கீழ்நிலையை பிரதிபலிக்கும் உடைகளையும் உயர்வம்சம் மேல்நிலையை பிரதிபலிக்கும் பதவிவழி உடை முறை இன்று வெறும் அலங்கார ஊடகமாகமாறின. எட்டுமணித்தியால வேலை, தொழில் நிலையத்தில் தொழிலாளி முதலாளி, வேலை முடிந்தால் எல்லோரும் சமமான மனிதர்கள் என்னும் சோசலீச பாங்கு உலகெங்கும் நாகரீகமடையத் தொடங்கியது.

தொழில் என்பது ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்தும் பொருட்டே அது உயர்பதவியாக இருந்தால் என்ன, கீழ் நிலைப் பதவியாய் இருந்தால் என்ன, கடமை முடிந்தால் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்திற்கு தலைவர் ஆகிவிடுகின்றார்கள். குடும்பம் வேறு தொளில் வேறு குடும்பமும் தொழிலும் ஒன்றல்ல என்ற பாங்கு உலகெங்கும் மலரத்தொடங்கியமையே. குடும்ப ஆதிக்க பதவியும் அடிமை நிலைக் குடும்ப வாழ்க்கையும், பெருமளவாக மாற்றம் கண்டது.

# 6 மொழிக் கலாச்சாரம்

மொழியென்பது மனஎண்ணப் பரிமாற்ற ஊடகமாகும். மொழியானது மனஎண்ண சிந்தனை விருத்திக்கும் அறிவியல் கல்விக்கும் ஆதாரமானது. உயிரினக் கூர்ப்பியல் பின் பிரகாரம் மோப்பம், ஓசை உணர்வு இவை வழியாக ஓசை எழுப்பியும் சைகை மொழி மூலமும் தன் உணர்வுகளை வெளிப்படுத்திய மனிதன் பாடல், கவிவடிவிலான பேச்சு, இவ்வாறு மொழியறிவை படிப்படியாக பரிமாணம் காணவைத்த மனித திறமை இன்று நாம் காணும் இலக்கணங்களுடன் கூடிய மொழியாகும்.

பொதுவாக ஒரு மொழி இலக்கண இலக்கிய, இதிகாச புராணங்களுடன் (சமயதத்துவங்ள் ) திகழ்கின்றபோதும் உலகம்முழுவதிலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளமொழி அனைத்தும் இலக்கிய விடயத்தில் ஒரு பொதுத்தன்மை யுடன் மிளிர்கின்றதென்றால் இதற்குக் காரணம் ஆரம்பகால சோச லிச வாதிகளான ஆரியர்கள் தமது மொழியை அதாவது இலக்கங்க ளுடன் கூடிய எழுத்து மொழியை உலகெங்கும் பரப்ப முற்பட்டமை யேயாகும்.

இப்பிரபஞ்சத்தில் நாம் வாழும் பூமியைப் போல்; ஏதாவது உலகத்தில் உயிரினம் உருவாகி கூர்ப்பியல்பு அடைந்து மனித இன பரிமாணத்தில் மொழியறிவை அதாவது இலக்கணங்களுடன் கூடிய மொழியை பெற்றிருப்பார்களானால் நிச்சயம் பூமியில் காணப்படும் எல்லா மொழிகளுக்கிடையிலான பொதுவான இலக்கண மரபை காணமுடியாது. காரணம் இவ் இலக்கண அமைப்பு ஒரு சிறு குழுவி னராலேயே உருவாக்கப்பட்டு உலகெங்கும் பரப்பப்பட்டமையேபெரும் பாலும் ஒற்றுமைத்தன்மையுள்ள இலக்கண மரபாகும். இதைவிட எழுத்து மொழியும் ஆரம்பகாலத்தில் ஒரே மொழியாகவிருந்து உதாரணம் தமிழ் சிங்கள மொழியில் உள்ள 'அ' என்ற சொல்லுக்கு நிகரான வடிவமே இலத்தின் மொழியில் 'ஆ' உள்ள A என்னும் பதத்தைக் குறிக்கும் சொல்வடிவமாகும்.

இருப்பின் மொழிக்கு இறை அந்தஸ்துக் கொடுத்து எழுத்து மொழியையும் இலக்கியத்தையும் சமதரும ஒருவனே இறைவன் என்ற கொள்கையுடன் ஆரியக் குழுமத்தால் இறைமொழி உலகெங் கும் பரப்பப்பட்டு, அவைமருவி பல வடிவிலான எழுத்து மொழியாக மாற்றமடைய முன் எல்லா மனிதக்குழுமங்களுமே தத்தமக்கென இடுகுறிச் சொற்களுடன் கூடிய கொலேக்கியல் வடிவிலான இடியம்ஸ், பிறேசஸ் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நிலைகளில் கொச்சு மொழியாகக் கைகொண்டிருந்த வேளையிலேயே இறைமொழி உல கெங்கும் பரப்பப்பட்டன.

இவ்வாறு நூல் 3 மனித நாகரீகவியல்நூலில்கூறப்பட்டது போல் பல நிலை மொழி வடிவங்கள் உருவானாலும் ஒவ்வொரு மொழி யும் அதன் அறிவியல் உச்சத்தில் ஒரு வடிவிலும், கீழ் நிலை வடிவில், பிறிது வடிவத்திலும் இருக்கு மென்பதாகும், இதுவே மொழியை, பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் வேறுபடுத்தியதென லாம். உதாரணம் ஆங்கிலம் பாமர ஆங்கிலேய மக்கள் பேச்சுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் நிலை ஆங்கிலேய மக்களின் ஆங்கிலத்திற்குமிடையில் பாரிய இடைவெளி காணப்படுவதற்கு காரணம் பாமர மக்களின் பேச்சு மொழியில் இலக்கணம் குன்றி, இடியமஸ், ப்றேஸசஸ் வடிவிலான பேச்சு வடிவமே கூடியளவு ஒலிக்கு மென்பதாகும். கல்விகற்று உயர் நிலையில் திகழும் ஆங்கிலேயரின் பேச்சை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும் காரணம் அவர்கள் பேச்சு நாம் பொது வாக கற்கும் இலக்கணம் ஒத்திருக்கு மென்பதாகும். இதுபோல் ஆங்கிலமொழி நாட்டுக்கு நாடு வேறுபடும் மென்பதாகும், இதைப் போலவே எல்லா மொழிகளும், மேலதிக உதாரணம் தமிழ். சிங்களம் தமிழ் பேச்சு மொழி இந்தியாவில் வித்தியாசமாகவும், இலங்கையில் வித்தியாசமாகவும், இருப்பினும் உலகத் தமிழ் ஒன்றியம் தமிழில் பல ஆய்வுகள் செய்து தமிழ் மொழிச் சொல்லுக்கு பாலமாக விளங்கு வதால், உயர்நிலை எழுத்து பேச்சு கிட்டத்தட்ட ஒரே வடிவில் இருக்கின்றதென்பதாகும் இவ்வாறே சிங்களமாகும், சிங்களம் மற்ற மொழிகள் போலல்லாது கல்வி மொழிக்கும், பாமரமக்களின் பேச்சு மொழிகளுக்கு மிடையில் பாரிய இடைவெளி இருக்கின்றதென்பது மறுக்க முடியாத உண்மைகளாகும்

## காரணப் பெயர்களும் மொழி இலக்கியங்களும்

இடுகுறிச் சொற்கள் அம்மொழிகளின் தொன்மையையும் அதே போல் கொலோக்கிய வசனங்களும் அம்மொழியின் தொன்மையைக் குறிக்கும், கொலோக்கியில் வடிவிலான பேச்சு வடிவே கவிநயத் துக்கு முக்கிய காரணமாகவும் பாமரமகனான திருவள்ளுவரின் திருக் குறளுக்கும் அடிப்படையும் கொலோக்கியலேயாகும், ஆனால் கார ணப் பெயர்களும் இலக்கியங்களுமே அம் மொழியின் அறிவியல் வளத் தையும், அறங்கள், தருமங்கள் நீதிக் கதைகள் என்னும் வடிவில் அம் மொழியின் அறிவியல் சோசலீச ஆட்சியையும் குறிக்குமென்றாகும், எனவே இடைக்காலத்தில் நல்லாட்சியும் நல்ல மொழி வளத்துடனும் சோசலீச அறிவியல் சங்கங்களுடன் சீரும் சிறப்பும் பெற்று தமிழ் பல காலம் ஆசியாவின் பெரும் பகுதியை ஆட்சி செய்தது என்ற கூற்று சந்தேகமற்ற ஆதார பூர்வமான உண்மைகளாகும். இவ்வாறான தமிழ் அறிவியல் வளம் பல வேற்று மொழியினரால் கூட மெச்சப் படுகின்றதென்பது இக் கூற்றுக்கு வலுச்சேர்க்கின்றதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று உலகை ஆளும் ஆங்கிலம்

உலகில் நல்ல மொழி வளத்துடன் உயிர் வாழும் மொழிகள் அரேபியமொழி, இந்திமொழி, தமிழ்மொழியாகும், இறந்த நல்மொழிகள் வரிசையில் இலத்தீனும், சமஸ்கிருதமொழியும், இன்று உலகை ஆளும் மொழியாக ஆங்கிலம் என்னும் கூற்று மிகைப்படாத கூற்றாகும்

உலகின் பெரும் பகுதியை ஆங்கிலமும் ஜெர்மனிய மொழியும் ஆண்டாலும், ஆங்கிலம் இன்று பெரும்பாலும் உலகின் பொது மொழியூடகம் என்னும் அந்தஸ்தை பெற்றுவிட்டதெனலாம். இத்துடன் இம் மொழி விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் பல பெயர்ச் சொற்கள் மருத்துவ ரீதியாகவும் தேவைப்படுவதால், மக்கள் மத்தியில் விதிக்கப்பட்ட சட்டதிட்டத்திற்கமைய, தொடர்ந்தும் ஆங்கில மொழிக்குள்பிற மொழிச் சொற்கள் ஊடுருவி பாவனையில் வருமானாலும் அல்லது புதுச் சொற்கள் பாவனையில் வருமாகவிருந்தாலும், அவை அம் மொழிவளத்துக்குள் வாங்கப்படுமென்பதாகும். இதுவே அம்மொழி நல்ல அறிவியல் வளத்தை பரிமாற்றம் செய்யும் ஊடாகமாகவும், மற்றும் 26 எழுத்துக்களை மட்டுமே அம் மொழி கொண்டிருப்பதால், தொழில்நுட்ப விடையங்களுக்கு இலகுவாகி உலகின் முதன்மை மொழி ஊடாகமாக ஆங்கிலம் திகழ்கின்றதென்றால் அக் கூற்று மிகையாகாது.

# 7 கூட்டிடக் கலைக் கலாச்சாரம்

கட்டிடக் கலைகளுக்கு, அடிப்படையானது சமாதிவழிபாடும், பிரமியக் கட்டிடக் கலைகளுமேயாகும். இக் கட்டிடக்கலை ஆரம்ப கர்த்தாக்களாலேயே, மிகத்திறமையான கணிப்பீடுகளும் கிரகவழிபாடும் ஏற்பட்டதெனக் கொள்ளலாம், மந்திரம் கணிதவியல் கணிப்பீடு, ஆன்மீகம் மனித வாழ்க்கையில் பாதிப்புக்கள் ஏற்படுத்துகின்றன என்று அறியப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதற்கு முதற்காரணம் ஆன்மீகம் நினைவு கூரப்படவேண்டுமென்பதற்காகவும் இறக்கும் ஆன்மாக்கள் இறக்கும் நேர அமைபுக்களைப் பொறுத்து அவை அந்தந்த கிரகசாரத்தில் சஞ்சரிக்க வழியேற்படுவதால், கட்டுப்பாடற்ற ஆன்மீகத் தொந்தரவுகள் மனிதருக்கு ஏற்படுவது தவிர்க்கப்பட்டதெனலாம், இதைவிட நாம் செய்யும் தன்மை தீமைகளைக் கட்டுப்படுத்துவதும், பாவபுண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை வெளிப்படுத்தவும், நாம் செய்யும் பாவம் எட்பரம்ப ரையையே பாதிக்கும் நிலைகளில் பிள்ளை பிறந்து துன்பப்படக்கூடிய நிலைகளையும், ஆன்மீகக் கலையூடாக எமக்கு அபாற்பட்ட விடை யங்களை கணிப்பிட்டு அறிவதற்கும் உதாரணம் நோய்கள், தக வல்கள், மற்றும் பல விடையங்களின் பொருட்டு இயற்கையுடன் இணைத்து பிரமிய முறையில் செய்யப்பட்ட ஆன்மீக வழிபாடே பிற்காலத்தில் கிரகவழிபாடாயின.

எல்லாச் சமயங்களும், அரசாட்சியையும், அரண்மனை கட்டிடமர பையும், ஆன்மீக நினைவு கூரலையும் அடிப்படை யாகவைத்தே ஆலைய கட்டிடக்கலையின் பொது அம்சமாகும்.

# 8 யுத்தக் கலாச்சாரம்

யுத்தக்கலாச்சாரத்தில் முதலில் தோன்றிய யுத்தமுறை கொரில் லாப் பாணியிலான மறைந்திருந்து தாக்கும் யுத்தமாகும். இவ்யுத் தத்தின் கொடுமை பல உயிர்களைப் பலிகொள்ளும் என்றும் நீதியற்ற இந்த யுத்தத்தை செய்ய யாராலும் முடியுமென்பதால் சோசலீச கூட் டுக்குடும்ப முறையும் பரம்பரை வம்சவழி ஆட்சிமுறையும் சோசலீச கொள்கையின் முதற்படியாயின இதன் பிரகாரம் யுத்தம், யுத்த தருமங்களுக்கு உட்பட்டதாக அமைக்கப்பட்டதெனலாம், பெண்கள், குழந்தை வயோதிபர் யுத்தங்களால் பாதிக்கப்படக் கூடாது என்பதும் யுத்தம் இரவில் நடத்தப்பட முடியாதென்றும், சரண் அடைபவர்கள், தூதுவர்கள் கொல்லப்படக் கூடாதென்றும், அத்துடன் யுத்தமோதல் கள், எப்போதும் நேருக்குநேர் இடம்பெறவேண்டுமென்பதும், நாட்டின் பாதுகாப்புக்குஅச்சுறுத்தல் வரும்போது மன்னனே நேரில் போரில் ஈடுபடவேண்டுமென்றும் நல்ல தத்துவங்களுடன் தமிழ்ச் சங்க சேர சோழ பாண்டிய ஆட்சி தென்கிழக்கு ஆசியாவிலேயே நீண்டகாலம் ஆட்சிசெய்து சமதர்ம சிந்தனையை நிலவச் செய்ததெனலாம்.

இத்துடன் வேட்டை யுத்தமென்பவற்றால் கிடைக்கும் மனித மிருக உடல்கள் உணவாகக் கூடாதென்றும், நல்நோக்கங்களுக்காக மட்டுமே யுத்தம் செய்ய முடியுமென்னும் சட்டதிட்டங்களும் விதிக் கப்பட்டிருந்ததெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் ஆரம்பகாலத்தில் மனிதர்களால் கொடுமையாக பாவிக்கப்பட்ட நேர்மையற்ற ஆன்மீகக் கலைகளின் யுத்தமும் இடைக் காலத்தில் வெற்றிகொள்ளப்பட்டு, நல்லாட்சி நிலவினாலும் இன்று நாம் காணும் இரசாயன ஆயுத யுத்தம் ஆதிகால யுத்த மரபுகளுக் கமைவாக நேர்மையற்ற யுத்தம் செய்வனவாகவே இருக்கின்றன. இவை மனிதனை பாகுபாடின்றி அழிக்கவல்லன மட்டுமன்றி முழு உலகையும் அழிக்க வல்லதாகும்.

# 9 இசை நாட்டிய பாரம்பரிய கலாச்சாரம்

இசை நாட்டிய பாரம்பரியக் கலை, உருவாகுவதற்கு மனித மொழியியலின் ஆரம்பப் படிகளே. மேற்படி கலைகளாகும் மனிதன் தன் எண்ணத்தை பிறருக்குத் தெரியப்படுத்தவேண்டிய தேவை ஏற் படுகின்றபோது முத்தமிழின், முதல் தமிழான இயல் என்னும் முக பாவனை சைகை மொழி என்பவற்றால் தன் உணர்வு வெளிப்பாடு களை தெரியப்படுத்த இம் மொழி பெரிதும் பயன்பட்டதெனலாம் பின்னர் படிப்படியாக மனிதன் கூவியழைத்தல், இலக்கணமற்ற கொச்சைலோக்கியல் மொழியில் பாடுதல் என்பன உட்பட இயற்கை வளங்களைக் கொண்டு சத்தங்களை ஏற்படுத்தி ஆரம்பகால மனிதன் தனது மனமகிழ்வு கவலை, துக்கம், , குதூகலம், என்ப வற்றை பிரதிபலிக்க இசைக்கருவிகளை பயன்படுத்தியமையும், மொழி யியலின் இரண்டாவது படியான இசைத்தமிழ் என்று கூறும் இசைப் பாரம்பரியமும், மூன்றாவதாக வசன நடையில் பேசக்கற்றுக் கொண் டமையும், இத்துடன் இயல் இசை ஆகிய இரண்டும் இணைவதால் நாடகத்தமிழ் என்னும் மொழியியல் வளர்ச்சியின் மூன்றாவது படி யேயாகும்.

இங்கு இசைக்கும் ஆன்மீகத்துக்கும் மூத்தோர் கருவி பேரிகை யாகும், இக்கருவியே உலகில் நாகரீகமடைந்த எல்லா கலாச்சாரக் குழுவினருக்கும் அடிப்படையானது எனலாம். ஒவ்வொரு மனித அறி வியல் நிலையைக் குறிக்கும் அவதாரங்கள் எனக் குறிப்பிடும் ஆன்மீக தேவுக்கள் ஒவ்வொன்றும் தாம் பெற்ற மொழியறிவையே தேவ வாழ்க்கையிலும் பிரதிப லிக்கும் என அறியப்பட்டமையே, ஆலய கிரியை முறைகளில் வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பூசைசெய்தல், சைகைமொழிபாவனைகளில் பூசைசெய்தல் மறை மொழியான சமஸ்கிருதத்தில் பூசை செய்வன என்பதாகும். இவ்வழி முறைகளில் உதயமாகியபடியாலேயே இசைநாட்டியபாரம்பரியக்கலை தெய்வக் கலை என வர்ணிக்கப்படுகின்றது. இதைவிட தேவுக்கள் இசை வெள்ளத்தில் மிகவும் விருப்புக் கொண்டன என்றும், இசை நாட்டியமாடுவதில் பெரு இன்பம்கொண்டிருக்கின்றன என்பது அறியப் பட்ட உண்மைகளாகும்.

நம் அனேக எல்லா மொழிக் குடும்பங்களும் ஏதோ ஒருவகை இசை நாட்டியப் பாரம்பரியக்கலைகளைக் கொண்டிருக்கின்றன என்று அறிந்தாலும் பாரதநாட்டியம் என்பது எல்லா ஆசிய இனத்தவருக்கும் பொதுவான நாகரீகமடைந்த கலையாகும். இதைப்போல மேற்கத்தைய நாகரீகக்குழுமங்களும் தத் தமக்கென பல இசை நாட்டியக்கலைகளைக் கொண்டிருந்தாலும் இரா ணுவ அணிவகுப்பு மரியாதையின்போது இசைக்கும் இசையும் மந் திரக்கோல் அசைவு நடனமும் அவர்களின் பொதுவான இசைநாட்டி யப் பாரம்பரியமாக இருந்தாலும் இன்று உலகிற்கே ஒரு பொதுவான பரேட் இதுவென்றால் இக்கருத்து மிகையாகாது.

## மந்திரக் கோலும் நாட்டியமும்

மந்திரக் கோல் எனப்படுவது பாரிம்பரியமாக முன்னோர்க வால் உபயோகித்துவந்த பாவனைப் பொருட்களை தொடர்ந்து வைத் திருப்பதூடாக அப்பொருளுக்குரிய ஆன்மாக்களை வசியம் செய்ய முடியுமெனக் கருதியமையேயாகும் இந்த அடிப்படையில் இவர்களால் பாவிக்கப்பட்டகைத்தடி, உலோகங்களால் செய்யப்பட்டவையுட்பட ஆட்சி இலட்சினைப் பொறி உட்பட ஆட்சியாளர்களால் பாவிக்கப் பட்டு வந்த கோலையே செங்கோல் என்றும் கொடுங்கோல் என்றும் இதிகாசங்கள் அழைக்கின்றன.

## செங்கோல், கொடுங்கோல்

மன்னர்கள் பரப்பரை பரம்பரையாக ஆட்சி செய்த சின்னங்களில் முக்கியமானதாக உலோகத்திலான கைப்பிடியையே கருதுகின்றார்கள் இதைச் சத்தியச் சின்னமாகவும் தெய்வீகச் சின்னமாகவும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுவர் பொதுவாக நீதி தவறாது ஆண்ட பரம்பரையினரின் சின்னம் எப்போதும் நீதிக்காகவும் சத்தியத்திற்காகவும் செயல்படும் என்றும் சுயநலங்களுக்காக ஆண்ட பரம்பரையினரின் சின்னம் எப்போதும் தன் வாரிசுகளின் நலனுக்காகவே செயல்படும் என்பதனாலேயே இப்பரம்பரையினரின் ஆட்சியை செங்கோல் கொடுங்கோல் என வரையறுத்திருக்கின்றார்கள்.

இங்கே முல்லைக்குத்தேர் கொடுத்த மன்னனைப்பற்றியும் மாட்டுக் கன்றை தவறுதலாக நெரித்துக் கொன்ற குற்றத்திற்காக தன் ஒரே புதல்வனையே தேரால் நெரித்துக்கொல்ல தீர்ப்பு வழங்கிய மன்னர்களை இங்கே நினைவு கூரத்தக்கது.

இதைவிட சிலப்பதிகாரத்தில் தவறுதலாக நீதி வழங்கிய மன்னனும் அவன் பரம்பரையினரும் அழிந்து போனதையும் இங்கே ஒரு கேள்வி யெழுகின்றது. கண்ணகியின் கற்பா மன்னனின் செங்கோலா தண்டனை வழங்கியது என்கின்ற அறிவியல் கேள்வி எழுகின்ற போது நீதி விபரிக்கப்படும் வரை செங்கோல் மௌனமாகவிருந்தாலும், நீதிச்சபையில் நீதி விபரிக்கப்பட்டதும் முன்னதாக மன்னன் தன் செங்கோலை தவறவிட்டான் என வருகின்றது இங்கே நீதி தவறிய மன்னனால் ஒரு கணம் கூட செங்கோலை பிடிக்க முடியவில்லை என்பதுதான் இக்கருத்துத் தொனிக்கும் பொருளாகும். கண்ணகியின் கற்பின் பெருமையையும் ஆட்சியின் பரம்பரை நீதியையும் எடுத்தியம்பும் கற்பின் தீ மாளிகையை எரித்தது எனலாம்.

கொடுங்கோலும் ஆன்மீகமும் சுயநல ஆட்சி நோக்கத்திற்காகவும் கைக் கொள்ளப்படுகின்றமையால், முன்னைய ஆட்சிகளை. செங்கோல் எனவும் கொடுங்கோல் எனவும் வர்ணிக்கப்படுகின்றது. இவ்வினைவித்தியாசங்களை பிரதிபலிக்கும் பல வகையான மந்திரக் கோல்கள் இருந்தாலும் அரசாட்சி மரபைக் குறிக்கும் ஒவ்வொரு சமய பிரிவுத் தெய்வங்களுக்கும் ஒவ்வொரு சின்னங்களைக் குறிக்கும் செங்கோல்கள் உண்டென்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 அரசியல் கலாச்சாரம்

மனித நாகரீகப் பாதையில் அரசியல் என்பது சோசலீச சக்திகளால் ஏற்படுத்திவைக்கப்பட்டவை, முதளாளித்துவ சிந்தனைகளால் ஏற்பட்ட இடையூறுகாரணமாக தனது உச்சநிலையை அடையாமல் பல நிலைகளில் கலாச்சார விழமியங்களாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

இவ்வாறு அரம்பித்துவைக்கப்பட்ட அரசியலின் முதல்படி கூட்டுக் குடும்ப ஆட்சி பின் படிப்படியாக முன்னேறி கட்சி அரசியலாகப் பரிமாணம் கண்டதையும் இக்கட்சி அரசியல் கொள்கையே பல நிலை ஆட்சிகளுட்பட மக்களால் தெரிவுசெய்யப்படும் கட்சி ஆட்சி முறை என்னும் மக்களாட்சி வரைக்கும் ஒரளவுக்கு ஐக்கியநாடுகள் சபை பரிபாலனம் உலக அரசியலை ஒரளவுக்கு இணைக்கின்றது என்று பார்த்தாலும்,

இன்று நாம் காணும் வழிபாடு திருமண நடைமுறை மொழியியல், பண்பாடு, கல்வி. நீதித்துறை இவ்வாறு பொதுவாக எல்லா விடையங்களுமே அரசியல் நாகரீகத்தின் விழமியங்கள் என்றால் அக்கருத்து மிகையாகாது. எது எவ்வாறாயினும் இன்று பலரின் கருத்துப்படி கட்சி ஆட்சி முறையே சோசலீச ஆட்சியென இன்றைய பொதுவான கருத்தை இன் நூல் நிராகரிக்கின்றது.

பொதுவாகக் கல்வி, மற்றும் நீதி அரசியல் என்பன தமிழ் ஆட்சி வரலாற்றில் முச்சங்கங்கள் எனக் கூறப்படும் மூன்று துறைகளும் நாகரீகம் அடைந்து அரசியல் சபை ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பின் கீழ் நாட்டுச் சபையாகவும் முக்கிய சபையாகவும் விளங்குவதால் பிரதமமந்திரி இச் சபையில் முக்கிய பதவியிலும் நீதித்துறை, முதலாளித்துவச் செயல்பாட்டுக்கு அடிபணிய நேரிடும் எனக் கருதப்பட்டமையால் பல நீதியரசர்களைக் கொண்ட நீதிச்சபையாகவும், கல்வித்துறையும் வேந்தர் என்னும் தனித்த முக்கிய பதவி முதளாளித்துவ செயல்பாடுகளுக்கும் தனக்கு விரும்பியவர்களுக்கு பட்டங்கள் கொடுக்கும் தன்மையை கட்டுப்படுத்த துணைவேந்தர் முறையும் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழு என்ற சோசலீச பாங்குடனும் திகழ்கின்ற தென்பதையும் இவ் முச்சங்கங்களும் மக்களாட்சியில், சோசலீச நிலைகளுக்கமைய இவ்வாறு நாகரீகம் கண்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கல்வியலில் முக்கிய உதாரணமொன்றை இந்நூல் முன் வைக்கின்ற தென்னவெனில், பாரம்பரிய நடைமுறைகளுக்கமைய, கல்விகற்காத ஒருவருக்கும் அவரின் திறமை வெளிப்பாட்டின் அடிப்படையில் பட்டங்களை வழங்க முடியுமென்பதாகும். ஒருவர் சிறந்த கண்டுபிடிப்பை, மேற்கொண்டாலோ அல்லது வேறு விடையங்கள் சம்பந்தமாக ஏதாவதொரு பல்கலைக்கழகம் யாராவது ஒருவரின் திறமையை நன்கு அறியும் பட்சத்தில், இவ் விடையம் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவருக்கு தெரியாமல், பல்கலைக் கழக முதலை மற்றும் ஆலோசனைச் சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்று பின் மானிய ஆணைக் குழுவின் இறுதி முடிவின் பின்னே வெளியிட முடியுமென்பதாகும். ஆனால் இன்று பல்கலைக்கழகங்கள் மட்டும் தான் பட்டங்கள் வழங்குகின்றன என்று கூறமுடியாது காரணம் ஆலையபரிபாலன சபைகள் தொடக்கம் அரச தலைவர்கள் வரை பட்டம் வழங்கி கௌரவிக்கும் உரித்துடையவர்களாகி விடுகின்றனர். இந் நிகழ்வுக்கு காரணம் கலாச்சார இணைவுகளேயாகும்.

இவ்வாறு முச்சங்கங்களின் முக்கிய சங்கமாகிய அரசியல் சங்கம் மக்களாட்சி வரை முன்னேறியிருப்பினும் இன்னும் உலகில் ஆட்சியற்ற மனிதக்குழுமங்கள் தொடக்கம் முடியாட்சி மற்றும் இராணுவ ஆட்சிகட்சியாட்சி இவ்வாறு மக்களாட்சி வரை சோசலீச நாகரீகம் பல அரசியல் நிலைகளைத் தோற்றுவித்தாலும் முதலாளித்துவம் சோசலீசம் என்ற இரு முனைக்கு இடையில் இருக்கும் அரசியல் வாதிகள் தங்களை இடது சாரிகள் என்றும் வலது சாரிகளென்றும் இனம் காட்டிக்கொள்ளும் நிலை இன்று உலகெங்கும் காணப்படுவது மட்டுமன்றி தீவிரவாதப் போக்குடையோர் கட்சியாட்சியே சோசலீச ஆட்சியெனவும் வாதாடுகின்றார்கள் ஆட்சி மற்றும் அரசியல் ஆகியவற்றுக்கு ஆளுமையின் பங்கு முக்கியமாகி மற்றும் ஜனாதிபதிப்பதவி முதலாளித்துவப்பதவியின் விழுமியம் என்று கூறப்பட்டாலும் ஜனாதிபதிப்பதவி அரசியலில் ஒரு முக்கிய அம்சமெனக் குறிப்பிட்டால் அக்கருத்து மிகையாகாதெனலாம். காரணம் ஒன்று ஜனாதிபதியே நிர்வாக ஒருங்கிணைப்பாளராக இருப்பது மற்றையது சட்டங்களுக்கு அப்பாற்பட்டவராக இருப்பதால் இதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சட்டங்களுக்கு மேற்பட்டவராக கணிக்கப் படுவதால் ஏற்படும் நன்மைகள்

சட்டங்கள் எனப்படுவது சோசலிச பாங்கில் மக்கள் பங்கீட்டு அடிப் படையில் வாழ விதிக்கப்படும் சட்டத்திற்கமைவாக சுதந்திரமாக மக்கள் வாழ வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் ஒருவரின் சுதந்திரம் மற்றவரின் வாழ்வை பாதிக்கக் கூடாதென்பதற்காகவும் முதலாளித்துவ எண்ணங்களால் விளையும் குற்றச்செயல்களை கட் டுப்படுத்துவதற்காக சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் சட்டத்தின் முக்கிய நோக்கம் ஒருவரைத் தண்டிப்பதன்று அவரைத்திருத்தி நல் வழிப்படுத்தும் அதேநேரம் தண்டிக்கப்படுத்துவதனூடாக மற்றவர் களும் இவ்வாறான குற்றங்கள் செய்யாதிருப்பதைத் தடுக்குமெனக் கருதியதாலேயே சட்டங்கள் மக்களைத் தண்டிக்கின்றனவே தவிர பழிக்குப் பழிவாங்குவதில்லை, சட்டங்களில் காணப்படும் மிக முக் கிய சோசலிச எண்ணம் என்னவெனில் குற்றம் செய்யாதவன் தண் டிக்கப்படக் கூடாதென்பதாகும் இதனால் ஒருசில குற்றவாளிகள் தப் பத்துப்போக வழியேற்படுகின்றதென்ற கருத்தும் மறுக்க முடியாத தேயாகும் எது எவ்வாறாயினும் நீதிமன்றம் குற்றங்களையும் சட்டங் களையும் ஆராய்ந்து தீர்ப்புக் கூறுமே தவிர சில இடங்களில் குற்ற வாளியின் நிலைப்பாட்டை அவை ஆராய்வதில்லை. எத்தகைய சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட நபர் குற்றமிழைத்தார் என்று குற்றத் திற்கான பின்புலத்தையும் ஆராய்வதில்லை, அத்துடன் சிலவேளைக ளில் ஒரு சிலருக்கு மட்டும் விதிவிலக்காக அச்சட்டம் கொடுமைசெய்த தாக கருத இடமுண்டு. ஆனால் அச்சட்டம் மாற்ற முடியாத தேவையா கவும் இருக்கும், இவ்வாறான நிலைகளில் சட்டத்தால் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட நபர், ஜனாதிபதியிடம் இரங்கல் மனுச்சமர்ப்பிக்க முடியு மென்பதாகும். இதைவிட சிறையில்தண்டனை அனுபவிக்கின்றவர் தண்டனையின் பெறுபேற்றை உணர்ந்து திருந்திவிட்டார் என சிறைக் காவலர்களின்குறிப்புக்கள் எடுத்துஇயம்புகின்றபோதும், சிறுகுற்றங்க ளுக்கு தண்டனை அனுபவிக்கின்றவர்கள் தொடக்கம்பல விடயங்களை மிகத்தேவையான நிலைப்பாடுகள் எனக்கருதும் விடயங்களை பலரின் ஆலோசனைகளின் பின்பே கையெழுத்திடும் அதிகாரத்தை பாவிக் கலாமென்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதிப்பதவி பொதுவாக நிறைவேற்று அதிகாரங்களை கொண்டிருப்பினும் கட்சியால் ஜனாதிபதிப்பதவி தீர்மானிக்கப்படு கின்றபோது அவர் கட்சியினருக்கு கட்டுப்பட்டே கையெழுத்திடும் அதிகாரத்தைப் பாவிக்க முடியுமென்பதாகும். மக்களால் தெரிவு செய்யப்படும்போது அப்பதவிக்கு கூடிய அதிகாரமும் சட்டங்களும் மேலும் வலுவூட்டும் போது அப்பதவி ஒரு சர்வஅதிகாரங்களையும் கொண்ட பதவியாகி விடுகின்றது. எது எவ்வாறாயினும் சோசலிச சிந்தனையே மக்களாட்சிக்கு வித்திட்டதெனலாம். ஆகவே மக்க ளாட்சி சிறந்ததெனக் கருதுகின்ற போதும் சில இடங்களில் வெறுப் புக்குள்ளாவதும் தவிர்க்க முடியாததே.

உதாரணம் இலங்கை, சோசலிச நற்சிந்தனையின் பிரகாரம் மக்களாட்சி என்னும் ஊடகமூடாகவே இலங்கையில் பெரும்பான்மை இன சிங்கள ஆட்சி ஏற்பட்டதெனலாம். முன்னர் தமிழாட்சியின் பல பிரிவுகளாக பல ஆட்சி நிலைகள் இருந்தபோதும், மக்களாட்சியென்னும் சோசலிச ஆட்சி யில் தமிழர் சுயாட்சிஇல்லாமல் போனது மட்டுமன்றி, அடிமைப்படுத்தும் பேரினவாத சிந்ததனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும் அது ஒரு புறமிருக்க மக்களாட்சியின் பயனாக தமிழருக்கு ஒரு சுயாட்சிஅன்று ஏற்பட்டிருப்பின்இவ் ஆட்சியின் பயனாகதமிழர் கீழ்ப்பட்ட மக்களைமேல் நிலை தமிழர் அடிமைப்படுத்தும் சட்டங்களை ஏன் இயற்ற முடியாதுஎன எண்ணுகின்றபோது மக்களாட்சியின் உன்னத தன்மை இங்கே கேள்விக் குறியாகின்றது. எனவே முடியாட்சியா, கட்சியினரின் ஆட்சியா மக்க ளாட்சியா சிறந்த சோசலிசக் கொள்கையின் அம்சமென வினா எழுப்பு கின்றபோது அப்பதவி நிலைகளை அலங்கரிப்பவர்களே சோசலிசவாதி களாகவும் முதாலாளித்துவ வாதிகளாகவும் திகழ்கின்றார்கள் எனக் கொள்ளலாம். (இடதுசாரிகள், வலதுசாரிகள்,)

## சோசலிச சிந்தையும் முதலாளித்துவ சிந்தையும்

ஒரு காலத்தில் மொழி அறிவு, பண்பட்ட வழிபாடு, தூய்மை திருமண வாழ்க்கை என்பன உலகில் உயர்வம்சத்தினரிடையே மட் டும் இருந்தாலும் இஸ்லாம் மதம் தனது கூடியளவு முயற்சியால் பல சட்ட திட்டங்களூடே கூடியளவு பாமர மக்களை நாகரீகமடை யச் செய்து ஒரு திரட்டிய மக்களமைப்பாக வந்தாலும், இதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமயமும் கிட்டத்தட்ட இக்கொள்கையூடே பாகுபாடற்ற பொது அமைப்பைக்கட்டியெழுப்பினாலும், கிஸ்றிதவரிலும் இந்துக்களிலும் தம்மிடையே ஏற்றத்தாள்வுகளை சமூக அமைப்பு ரீதியாக கொண்டிருந்து தற்போது பெருமளவு சோசலீச நாகரீகமடைகின்றார்கள் எனக் கொண்டாலும் ஒருவனுக்கு ஒருத்தியென்னும் சட்டம் கிறீஸ்தவச் சட்டமேயாகும்.

எனவே முடியாட்சியோ, கட்சியாட்சியோ, மக்களாட்சியோ அவ் அமைப்புக்களை அலங்கரிக்கும் கூடிய அதிகாரம் கொண்ட நயர்களின் தன்மைகளை பிரதிபலிப்பதே. முதலாளித்துவமும் சோசலீசமாகுமெனக் கொள்ளலாம். இங்கே மிக நல்ல சோசலீச வாதியை இராணுவ ஆட்சியே கொண்டிருக்க முடியுமென்பதாகும்.

அரசியல் அமைப்புக்களில் மிகச்சிறந்த சோசலீச அம்சம் என மக்களாட்சியைக் கருதமுடியுமோ, அதே போல் நற்சிந்தனையுடைய சோசலீச வாதியையும், முதலாளித்துவ வாதியையும் அவர்கள் தம் நடவடிக்கைகளால் தரும் விழுமியங்களூடாக அறிந்து கொள்ளலாம் என்பதாகும்

1) எப்போதும் ஒரு சோசலீச வாதி அன்பு நிறைந்தவனாகவும் அதாவது பிரபஞ்சம் அளவுக்கு எல்லையில்லாத அன்பைக் கொண்டவராகவும் நீர்க்க சிந்தனையும் உண்மையின் சொரூபமாவும் திகழ்வர்

ஆனால் முதலாளித்துவ வாதி சுய நலப்போக்கும் குறுகிய மனப்பான்மையும் பொய்மையே உருவானவர்களாகும்.

2) தியாகம், நேர்மை, இத்துடன் தன் தியாகத்தால் பிறர் வாழவேண்டுமென்று அவாக் கொண்டவராக இருப்பர்.

ஆனால் முதளாளித்துவ வாதிகள் பிறர் தியாகத்தால் தான் வாழநினைப்பவர்கள். நேர்மையற்ற சிந்தையும் எவர் அழியினும்தான் வாழவேண்டு மென்ற அவாக்கொண்டவராகத் திகழ்வார்கள்.

3) பூமி போன்றவர்கள், எம்பாதம் பூமியின் மேல் தினமும் படுகின்ற தென்பதற்காக, பூமித்தாய் எங்களைச் சபிக்கின்றாளா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தை தாயின் நெஞ்சில் உதைகின்றான் என்பதற்காக, தாய் அக் குழந்தையின் பாதங்களை வெட்டி யெறிவாளா? இம்மன நிலையை உடைவர்கள் எல்லோரும் நல்லவராகவே எண்ணுவர் மகாபாரதத்தில் தருமன் கூற்றுப்போல்.

இவர்கள் குருவிச்சை நுளம்பு போன்றவர்கள், புல்லுருவி கள், தான் வாழ பிறர் அடிமையாக வேண்டுமென நினைப்பவர்கள், பிறரின் உழைப்பிலும் உதிரத்திலும் வாழ்க்கை அமைக்கு மிவர்கள் தன் எண்ணப்பாட்டை இவர்கள் விளங்கி குரல் கொடுக்க கூடாதென் பதற்காக பொதுவாக இவர்களை அறிவிலிகளாகவும் வய்போசா மிரு கங்களாகவும் ஏவல் பேய்களாகவுமே, பிறரைப் படிப்படியாகக் கொண் டுவருவார்கள்.

4) இப்புவியும் வாழ்வும் நிலையற்றது எனவே உண்மையத் தேடி, உண்மையாகவும் சமத்துவமாகவும், சகோதாத்துவத்துடனும், எல்லோரும் சம உரிமை பெற்று வாழும் வாழ்க்கை அதாவது எல்லோ ரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே மேல் என நினைப்பவர்கள் சோசலிசவாதிகள்.

இப்புவியும் தானும் தனது பெண்டிரும் குழந்தைகளும் மட்டுமே நிலையான இன்பத்திற்கு உரித்துடையவர்கள் என இறை வன் தன்னைப் படைத்துள்ளான் போல் நினைப்பார்கள். ஆகவே இப்புவியும் தனது பரம்பரையும் அழிவில்லாதவர்கள் என்றும், மற் றோர் தமக்கு அடிமைகள் அடிமைச் சேவகம் செய்பவர்கள் எந்த நேரமும் அழியத்தயாரக இருப்பவர்கள் எனவும்.

5) தன் திறமையை இறைவன் பெயரிலும், தன்னால் பிறருக்கு தவறுதலாகப் பிழைவிட நேரிடின் தன் பிளைக்காக சதா வருந்து பவர்களாகும்.

முதளாளித்துவ வாதிகள் எப்போதும் பிற உழைப்பாலும் உதிரத்தாலும் விளைந்த பெருமையையும், திறமையையும் தனதென் றும், தான் எடுக்கும் முடிவுகளால் ஏற்படும் பிழைகளையும், தன் அடிமைகளின் தலையில் திறமைச் சூழச்சியால் போட்டுவிடுவார் கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) இவர்களிடம் போட்டியிருக்கும், பொறாமையிருக்கா கண்டிப்பிருக்கும் கோபம் இரா, இவர்கள் பிறருக்கு வழங்கும் தண்டனை மனவருத்தத்துடன், நல்ல சமூக அமைப்பு உருவாக வேண்டுமென்பதற்காகவும், சம்பந்தப்பட்ட நபர் திருந்த வேண்டுமென்பதற்காகவே இருக்கும், வஞ்சகம், சூழ்ச்சி இவர்களின் எதிரி;

இவர்களிடம் போட்டியிருக்கா எல்லா விடையங்களிலுமே தான் தான் உயர்ந்தவர் என்று எண்ணுவதால் பிறர் இவரிடம் போட்டிக்குப் போக அஞ்சுவார். இவரும் பிறருடன் தான் தோற்க நேரிடும் என்னும் விடையங்களில் போட்டிக்கு போகார் சூழ்ச்சியால் வெல்லவே இவர்கள் விரும்புவார்கள் தன்னை விஞ்சுபவர்களை எப்படியாவது வஞ்சம் கொண்டுவிடுவார்கள், தன்பிள்ளைக்கும் இதைத் தான் கற்பிப்பான் முதளாளித்துவ வாதி.

7) இவர் ஒரு பொருள் தனக்கு கிடைக்காவிடாலும் அப்பொருள் தன் மகத்துவத்தை இளக்கக் கூடாதென்றும், இவர்கள் காதலை வாழவைக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டதாகவும் தன்னால் வாழவைக்க முடியாவிட்டாலும் அவ்வுயிர் சந்தோசமாக இருப்பதையே தன் சந்தோசமாக எண்ணுவார்கள்

தனக்கு கிடைக்காப் பொருள் இருக்கக் கூடாதென்றும் தனக்கு கிடைக்காப் பெண் வாழக்கூடாதென்று நினைப்பார்கள்

(8) சோசலிசத்தின் உச்சிமே அகிம்சையாகும் ஆன்மீகத்தை நன்மைக்காகவும் நன்றிக்காகவும் நன்றிக்கடனாகவும் நல்வழி காட்டலுக்கு கலங்கரை விளக்காகவும் இவர்கள் பார்ப்பார்கள்

இவர்களின் உச்சம் கொடுமை ஈவிரக்கமற்ற தன்மை, ஆன்மீகம் பிறருக்கு துன்பம் விளைவிக்கும் ஒன்றாகவும் தன் சூழ்ச்சி வலையில் வீழ்த்தும் கலையாகவும், ஆணவம், கன்மம், மாயை என இந்து சமய புராணங்கள் கூறும் மகா சாத்தானாகவும் அரக்கனாகவும் இருப்பார்கள்

9) நீதிக்கதைகளுக்கு கதாநாயகனாகவும் இரு தாய்கள் ஒரு குழந்தையை உரிமை கொள்ளும் தர்க்கத்தில் மன்னவன் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்குப்பாதி கொடுங்கள் என்று கூறும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சோசலீச வாதி குழந்தை தனக்கு கிடைக்காவிட்டாலும் இறக்கக் கூடாதென்பதற்காக அவளுக்கே குழந்தையை கொடுங்கள் குழந்தையை வெட்ட வேண்டாம் என்கின்றபோது தன் உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டுவார்கள்

இவர்கள் அநீதிக்கதைகளுக்கு கதாநாயகனாகவும் நீதிக்கதைகளுக்கு வில்லனாகவும் குழந்தை வெட்டப்பட்டு கொலை செய்யப்படப் போகுமென்பதை அறிந்தும் ஒருவித பதட்டமும் இல்லாமல் தன் கொடூர எண்ணத்தை ஊகிக்கச் செய்துவிடுவார்கள்.

10) பெருந்தன்மையும் உரிமையை, அனுபவிக்கும் விடையத்தில் நெகிழ்ச்சியுடனும், உண்மையுடனும் தன்னை முதலாளியாகக் காட்டாமல் எப்போதும் சேவகனாகக் காட்டிக் கொள்வான். வீரத்தில் சிறந்தவனாகவும் தன் தலை உருண்டாலும் நீதிக்கு சார்பாக முடிவெடுப்பார்கள், தியாகியாகவும் பயிரில் நெல்லாகவும், மரத்தில் தென்னையாகவும், பனையாகவும் இருப்பார்கள் நெல் தன் தலையில் கதிரைக்கொண்டு மிளிர்கையில் பணிந்தே பயனைத்தருமென்பதாகும்.

ப்றர்வீரத்திலும் உழைப்பிலும் உதிரத்திலும் விழையும் அற்பவிடையங்களை, அனுபவிக்கும் முதல் முதலாளியாகவும் தனது உடைமையும் தனதாகவும், தனக்கு நிகராக உரிமையை அனுபவிக்கும் விடையத்தில் எவரையும் விட்டுவைக்காமலும், மற்றவர்கள் எல்லோரும் தன் தயவில் வாழும் எடுபிடிகளாகவும், பெரும்பாலும் பிறர்தலை உருளக்கூடியதான முடிவுகள் எடுப்பதில் முன்மாதிரியாகவும் தனக்கு ஆபத்து வரும் என்னும் விடையங்களில் நல்ல விடையமானலும் தன் வினைவிதைப்பால் முடிவெடுக்க முடியாமலும், பயிரில் புல்லாகவும் குருவிச்சையாகவும் புல்லுருவியாகவும் திமிர்கொண்டு இருக்கும். இவர்கள், உரிமை விடையத்தில் தனதாகவும் உழைப்பு விடையத்தில் தனக்கு ஒன்றுமே தெரியாத அபபாவிபோல் எல்லாம் உங்களுக்காகவும் உங்களுக்காகவே தான்போன்றும் நடிப்பார்.

(11) இவர்கள் சொர்க்கத்தின் வாயில்களாகவும், வாழ்க்கையின் இனிமையையும், தூய்மையையும், தியானத்தையும் அறிவின் பொக்கிசமாகவும் இவர்கள் முன்னுக்குப்பின் முரண்படாமல் இருப்பதால் கற்றறிவு இல்லாவிட்டாலும் எக்கேள்விக்கும் இலகுவாகப் பதிலளிப்பார்கள் உண்மையில் அரிச்சந்திரனாகவும் துன்பத்தில் தியாகியாகவும் அகிம்சையில் ஜேசபிரானாகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நரகத்தில் முட்களாகவும் கரும வினையாகவும். இனிமையில் கொடுமையாகவும் வரட்டுக் கௌரவமாகவும் பிறர் இன்பத்தையும் வாழ்க்கையையும் கெடுப்பவர்களாகவும் சுய நலத்தில் குறுகிய கிணறாகவும் கற்றறிவு இருந்தாலும் உண்மையைத் தேட அஞ்சுபவர்களாகவும், அரிச்சந்திரனை கொடுமைப்படுத்துபனாகவும் ஜேசுபிரானை சிலுவையில் அறைந்தவனாகவும் மூன்னுக்குபின் முரண்படக் கூடியதாக சந்தர்ப்பவாத முடிவுகளை எடுக்கும் சந்தர்ப்பவாதியாக இருப்பதால் பிறர் கேள்விகளுக்கு அஞ்சுவார்.

12 ) இவர்கள் தெளிந்த நீரோட்டம், தாக சாந்தி உண்மையின் இருப்பிடம்

இவர்கள் குளம்பிய குட்டை காவல்நீர். இவர்கள்குழம்பியகுட்டையில் மீன் பிடிப்பதால் குட்டையை குளப்பிக்கொண்டேயிருப்பார்கள்:

13 முற்போக்கு சிந்தனை, முற்போக்குவாதம் முன்னோக்கியே ஓடும் உயர்த்தும் எண்ணம், உயர்வின் வழி

பிற்போக்கு சிந்தனை, பிற்போக்குவாதம் இவர்கள் வண்டியின் னோக்கி அழிவைநோக்கியே ஓடும், பணயம் வைத்தல், அடிமையாக்குதல் இறுதியில் உலக அழிவு வரை செல்லும்

14 இவர்கள் பெரும்பாலும் அகிம்சைக்காகவும் தியாகத்திற்காகவும் உயர்நிலைப் போதகர்கள் ஆவார்கள், இவர்களால் கட்டப்படும் மனித இருப்பிடம் எப்போதும் துன்பமில்லாமல் உறுதியாகவிருக்கும்.

இவர்கள் சுயநலத்தில் உடையும் வில்லாகவும் பலவீனங்களின் கற்களால் இவர்களின் இருப்பிடம் கட்டப்படுவதால் என்றும் இடிந்து விழும் நிலையில் அத்திவாரம் திட்டங்கள் இல்லாது கட்டப்படுவதால் எப்போதும் உடைந்துவிழுந்து ஆபத்துக்களை ஏற்படுத்தும் நரக வாழ்க்கையாகும்;

இவ்வாறு மனிதரிடையே இருகுணம் ஆகிய இறைகுணமும் சாத்தானின் குணமும் இணைந்து வளங்கிய மனித சமூக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாட்சி சமய மொழிக் கொள்கையின் விளைவாக பல கலாச்சார இணைவுகளும், பல மொழிக் கலாச்சார குழுமங்களும் தோன்ற காரணமாகும்

எது எவ்வாறாயினும் மனித மனம் பலவீனமானது என்ற உண்மையையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. விஸ்வாமித்திரரும் மேனகையையும் இதற்கு உதாரணமாக அமைந்து விடுகின்றனர். இளகிய மனத்தையே காதல் விரைவில் பற்றிக்கொள்கின்றதென்பதும் மறுக்கமுடியாததே இனிமையும் இரசனையும் மனித மனங்களை குதூகலிக்க வைக்கும் ஆற்றல் மிக்கன, துன்பம் அடையாதவரை சமூக கட்டமைப்பை குலைக்காதவரை இன்பம் மனவிருத்தியின் நல்லசான்றாகும், பண்பாடு இருக்வேண்டும். அடக்குமுறை இருக்கக் கூடாது என்பது புதிய கருத்துக்களின் கொள்கை வெளிப்பாடாகும்.

இவ்வாறு எல்லா மனித தேவைகள் பங்கீடு என்னும் தேவையும் வழிநடத்தலின் அவசியமும் உணரப்பட்டமையே அரசியலின் தேவையாகும்

## பாரம் பரியமாக அரசியலில் முக்கிய பங்குவகிப்பது கொடியாகும்

ஒவ்வொரு சமயமும் தமக்கென ஒவ்வொரு கொடியையும், அப்பெரும் சமயம் தமக்குள் உள்ள உள்பிரிவுகள் ஒவ்வொரு கொடிகயையும், ஒவ்வொரு தெய்வமும், தமக்கென ஒவ்வொரு கொடியையும். ஒவ்வொரு மொழிப்பிரிவினரும் தமக்கென பொதுக் கொடியையும், ஒவ்வொரு ஆட்சிகளும் ஆட்சித் தலைவர்களும் தமக்கென ஒவ்வொரு கொடியையும், ஒவ்வொரு கட்சியினர் தமக்கென ஒவ்வொரு கொடியையும், ஒவ்வொரு நிறுவனத்தினரும் தமக்கென ஒவ்வொரு கொடியையும், ஒவ்வொருநாடும் தமக்கென ஒவ்வொரு கொடியையும் ஆட்சிப் பிரிவுகள் தமக்கென ஒவ்வொரு கொடியையும். ஒவ்வொரு நிலப்பிரிவும் தமக்கென ஒவ்வொரு கொடியையும் இவ்வாறு, பல கொடிக்கலாச்சாரம், பொது நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் கொண்டிருக்கின்றன. தனியார் நிறுவனங்களையும், ஒரு நாட்டின் உயர்பதவியான ஜனாதிபதி பதவியை அலங்கரிக்கின்றபோது மட்டுமே சுய விருப்பத்தின் பேரில், கொடிகளை ஏறபடுத்த முடியுமென்பதாகும். மற்றும் சில கொடிகள் பாரம் பரியமாக வருகின்ற தென்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒரு கட்சி தனது கொடியை உருவாக்கும் போது அக்கட்சியின் முழு ஒத்துழைப்புடனும், ஒரு நாட்டில் ஒரு கொடி உருவாக்கப்படும்போது புத்திஜீவிகளின் ஆலோசனைகளுடனும், மக்களின் பெருவிருப்பத்துடனுமே உருவாக்கவேண்டும் என்பதாகும். இவ்வாறு முழுவிருப்புடன் உருவாக்கப்படாத கொடிகள் அவமதிப்புகளுக்கு உள்ளாவதுடன், மக்களின் வெறுப்புக்கும் உள்ளாகும் என்பதுடன், மக்கள் மீது திணிக்கப்படவேண்டிய தேவையும் ஏற்படும் என்பதாகும். இது முக்கிய உதாரணம் அல்ல பொதுவிடையங்களுக்குமே.

## உளவியல் தத்துவக் கருத்துக்கள்

உளவியல் என்பதும் உளம், மனம் ஆன்மா, அறிவு என்று சொற்கள் உள்ளத்தைக் குறிக்குமென்பதாகும் இவ் உளவியல் நிலைப்பாட்டை பல காரணிகள் பாதிக்கின்றன.

1] பரம்பரை சூர்ப்பியல் முகூர்த்தம் ( அறிவியல் வளர்ச்சி உள்பட )

2) தாய் கற்பகாலத்தில் சந்திக்கும் இடையூறுகளும் மனநிலைகளும்

3) பிள்ளை பிறந்து வளரும் சூழல் (பாரம் பரியவாய் வழி கடத்தி வரும் கதைகள் உட்பட )

4) கல்வி

5) புறச்சூழல்

9) சமூக மாற்றங்கள்

7) பிறதாக்கங்கள் ( தேவைகள் )

என்பன ஒருமனித உளவியல் விருத்திக்கும், பாதிக்கும் விடையங்களாகிவிடுகின்றன. மேற்படி காரணிகளே ஒரு மனிதனை ஒரு சமூகவிருத்திக்காக நல்லவனாகவும், தியவனாகவும் உருவாக்குகின்றது.

( நூல் 6 இல் தொடரும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவுரை

இப் புதிய கருத்துக்கள் நூல் ஒரு பொது மனித இலக்கிய வடிவை பெறுகின்ற தென்பதையும் எதிர்ப்புக் கருத்துக்களை கூறி மக்களை குளப்பிவிடாது பொதுவான நன்மை தீமையான கருத்துக்களைக் கூறிமக்களையும் மனித சமூகத்தையும் இணைக்கும் பாலமாகவும்முதாலளித்துவ குணங்களாலும், அணு ஆயுதத்தாலும் மனித சமுகம் அழிந்து போகக்கூடா தென்ற நல்ல நோக்கத்திற்காகவும் உருவாக்கப்படும் ஒரு பொது நூலானாலும் பல தரப்பட்ட தத்துவ விழுமியங்களை ஆராயத்தவற வில்லை, தான் இருக்கும் கொப்பையே தறிக்கும்மந்திக் குணத்தின் தன்மைகளையும் இன் நூல் தந்தாலும் இவ்உலகில் பிறந்த மனிதரில் நான் உட்பட எந்த மனிதனும் முழுமையான நல்ல மானிடர்கள் அன்று No Man is perfect என்னும் ஆங்கிலப் பழமொழிக்கமைய எல்லாமனிதரிடமும் ஏதோ பலவீனங்கள் உண்டென்பது மறுக்க முடியாவிட்டாலும் காந்தியடிகளின் கூற்றுக்கமைய சகலகலையும்கற்று மற என்பதற்கமைய காந்தியடிகள் தன்னுடைய பெலவீனங்களைக் காட்டத்தவறவில்லை, எனவேவரட்டுக்கௌரவங்களுக்காக மனிதத்தை பலியிடப்படக்கூடாதென்பது தான் என் எண்ணக்கருவாகும். மனிதன் பதவி காரணமாகமட்டும் தன் கடமை நேரத்தில் மட்டும் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருந்தாலும் தமது கடமைக்கப்பால் எல்லோரும் சமமானவர்கள் என்றும் சகோதரத்துவமும், தன்மானமும் அதே நேரம் பிறர் மானத்தை அங்கீகரிக்கக் கூடிய நிலையிலும் பக்கசார்பற்ற மனநிலையும் வாழ்க்கையின் உன்னததத்துவங்களுக்காகவும் அடக்கு முறைகளுக்கெதிராகவும் பிற்போக்குத் தனங்களுக்கெதிராக போராடத்தவறக் கூடாதென்பதையும் மனித உரிமைகளை மதிக்கும் பண்பையும் பிறரின் மனம் நோகாதபடி நடக்கும் பழக்கவழக்கங்களையும் எடுத்துரைக்க முனைவதே புதிய கருத்துக்கள் நூலாகும், மற்றும் இன் நூல் அடிப்படைத்தத்துவ விழுமியங்களை ஆய்வு செய்து கருத்துக் கூறுகின்றதே தவிர எக்காலத்திலும் எந்த சமயங்களுக்கெதிராகவும் அரசியல் நிறுவனங்களுக்கெதிராகவும், சுட்டிக்காட்டி எதிர்ப்புக்கூறுமளவுக்கு செல்லாதுஎனவும், இது ஒரு பொது அம்சங்கள் நிறைந்த நூல் எனவும் மீண்டும் வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலும்புத்துண்டும் சுவையும்

நாய் எலும்புத்துண்டை சுவைக்கையில் எலும்புத்துண்டு நாயின் வாய்க்குள் குத்தி இரத்தக் கசிவை ஏற்படுத்தும், தன் இரத்தத்தில் நாய் சுவை கண்டு மகிழ்வதால் நாயின் அறியாமை உயிரிழப்பையே ஏற்படுத்தும் என்பதாகும்.

**பலரை சிலநாட்கள் ஏமாற்றலாம்**
**சிலரை பலநாட்கள் ஏமாற்றலாம்**

**"ஆனால்"**

**எல்லோரையும் எல்லாநாட்களிலும் ஏமாற்றமுடியாது.**

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org